Registered as a news paper.

பக்கங்கள் : பன்னிரண்டு

விலை ரூபா 8.00

# நமது ஈழநாடு

## தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இப்போது நாம் யாழ் நகரிலும்

10-15 நிமிடங்களில்....

பாஸ்போட்,

அடையாள அட்டை படங்கள்



Album Binding

Photo Creations

Duro Laminating

Photo Graphing

Digital Video

MOORTHY STUDIO AND DIGITAL COLOUR LAB

62/16 STANLEY ROAD, JAFFNA.

T.P 021-222 2884

JAFFNA ROAD, MANIPAY.

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 வைகாசி- 22 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற-ஆகிர் 27 (05.06.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ்:249

# பொதுக்கட்டமைப்பு விவகாரத்தால் ஜே.வி.பிக்குள் கருத்து முரண்பாடு!

## எம்.பிக்களை வசப்படுத்த சுதந்திரக்கட்சி முயற்சி

கொழும்பு—

பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் ஜனாதிபதி சந்திரிகா கைச்சாத்திட்டால் - ஆளும் கூட்டணி அரசில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பதா என்ற விடயம் தொடர்பாக ஜே.வி.பிக்குள் பலத்த கருத்து முரண்பாடுகள் தோன்றியிருக்கின்றன.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் அரசாங்கத்திலிருந்து வெளியேறவேண்டும் என்று ஒருசாராரும், விலகக்கூடாதென ஒருசாராரும் வலியுறுத்தி வருவதாலேயே ஜே.வி.பிக்குள் உட்பூசல் வலுவடைவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்சிக்குள் தோன்றியுள்ள இந்த நிலைப்பாட்டினால் ஜே.வி.பியின் மத்திய செயற்குழு மற்றும் அரசியல் சபையிடையே கடுமையான வகையில் கருத்து மோதல்கள் தற்போது நிலவிவருகின்றன.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவது குறித்து கருத்து மோதல்களில் ஈடுபட்டுள்ள ஜே.வி.பியின் உறுப்பினர்களிடையே ஒரு சாரார் அரசிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டுமெனவும்- இத்தகைய சந்தர்ப்பத்தில் அரசுக்கான ஆதரவு தொடர்ந்து வழங்கப்படுமாக இருந்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## ஆளும் கூட்டணி அரசு ஒருபோதும் கவிழாது!

### ஜே.வி.பி. அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு—

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஒருபோதும் கவிழவே கவிழாது என்று ஜே.வி.பியைச் சேர்ந்த அமைச்சர் லால் காந்த தெரிவித்துள்ளார்.

கலவெல என்ற இடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்த நாட்டையும் மக்களையும் பாதிக்கும் வகையிலான எந்தவொரு நடவடிக்கையையும் ஜனாதிபதி சந்திரிகா மேற்கொள்ளமாட்டார் என்ற நம்பிக்கை ஜே.வி.பிக்கு இருக்கிறது.

இந்த அரசு மக்களுக்காக செயற்பட்டு வருகிறது. எத்தனை ஊகங்கள் வெளிப்பட்டாலும் ஜே.வி.பி. அரசிலிருந்து ஒருபோதும் வெளியேறாது.

இந்தக் கூட்டணியை உடைப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க காத்திருக்கிறார். இது மிகப் பெரிய நகைச்சுவை. அவர் எதிர்பார்ப்பது ஒருபோதும் நடக்காது.

நாட்டின் கிராமப் புறங்களில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் புரட்சிகள் நிகழும் என்கிறார் விமல் வீரவன்ச!


கொழும்பு—

இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய சந்திரிகா - 16 ஆம் திகதிக்கிடையில் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திடவுள்ளதாகவும் இந்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டால் இலங்கை அரசியலில் பல புரட்சிகள் நிகழ்வது தவிர்க்க முடியாது போய்விடும் என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச - இன்றைய ஞாயிறு திவயின பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திட்டவுடன் ஜே.வி.பியின் அமைச்சர்கள் அனைவரும் அரசிலிருந்து விலகி நாடாளுமன்றில் சுயாதீனக் குழுவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு இந்தப் புரட்சி ஆரம்பமாகும்.

கடந்த 31 ஆம் திகதி ஜே.வி.பியின் அரசியல்சபை கூடியவேளை இந்த நடவடிக்கைக்கான முழுமையான அனுமதி கிடைத்தது. இதற்கு முன்னர் நடைபெற்ற ஜே.வி.பியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இதுகுறித்துத் தீர்மானமெடுக்கும் பொறுப்பை அரசியல் அதிகாரசபையிடம் ஒப்படைத்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## விரக்தியின் விளிம்பில் இருக்கிறாராம் மங்கள!

## வடக்கு - கிழக்கை பிரிப்பதற்கு ஹெல உறுமய தயாராகின்றது!

# விரக்தியின் விளிம்பில் இருக்கிறாராம் மங்கள!

## ஜே.வி.பி. வெளியேறினால் வெளிநாடு செல்லவும் திட்டம்



கொழும்பு —

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு - அரசாங்கத்திலிருந்து பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. விலகுமானால் தானும் அரசிலிருந்து விலகி, வெளிநாட்டுக்குச் செல்லவுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தனக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த புதன்கிழமை தனக்கு நெருக்கமானவர்களுக்கும், அரசியல்ரீதியான நண்பர்கள் சிலருக்கும் தனது வீட்டில் இரவு விருந்தளித்த அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விருந்துபசாரத்தில் - தற்போதைய அரசியல் நிலை குறித்துப் பேசிய அமைச்சர் மங்கள சமரவீர, பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தும் விடயத்தில் நான் தற்போது விரக்தியின் விளிம்பில் உள்ளேன்.

அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கை பிரிப்பதற்கு ஹெல உறுமய தயாராகின்றது!

## விரைவில் நாடாளுமன்றில் பிரேரணை

கொழும்பு —

தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்களை - நிர்வாக ரீதியாக பிரிப்பதற்கு நாடாளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு ஜாதிக ஹெல உறுமய தயாராகி வருவதாக அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ஓமல்பே சோபிததேரர் தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இந்தச் சட்டவரைபு பிரதி தயாரிக்கப்பட்டு முடிவடைந்துவிட்டது. அடுத்த ஓரிரு தினங்களில் அது நாடாளுமன்ற செயலாளரிடம் ஒப்படைக்கப்படும். மத மாற்றத்தைத் தடுக்கும் வகையிலான சட்டவரைபு போன்று இதுவும் தனிப்பட்ட நாடாளுமன்ற பிரேரணையாகவே கொண்டுவரப்படவுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் அமரகீர்த்தி தேரர் இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உடுப்பிட்டியில் வயோதிபர் சுட்டுக்கொலை!



வடமராட்சி —

உடுப்பிட்டி - மல்லன்தறை வீதியில் நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் இனந்தெரியாதோரால் வயோதிபர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொம்பந்துறை - வல்வெட்டித்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு இந்தியா ராணுவ உதவிகள் வழங்காது!

## வைகோவுக்கு மன்மோகன்சிங் உறுதிமொழி

புதுடெல்கி —

இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா இராணுவ உதவிகளை வழங்கவோ, இராணுவ ஒத்துழைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திடப்படவோ மாட்டாது என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் - ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோவுக்கு உறுதியளித்துள்ளார்.

இந்திய - இலங்கை கூட்டறிக்கை குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பின்போதே மன்மோகன்சிங் இந்த உறுதிமொழியைக் கூறினார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக வைகோ பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வந்து இந்தியப் பிரதமரைச் சந்தித்துவிட்டுச் சென்ற பின்னர் இங்கு பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளின்படி எனக்கு ஏற்பட்டுள்ள நியாயமான கவலையை பிரதமர் மன்மோகன் சிங்கிடம் பகிர்ந்துகொண்டு அவருக்கு இதுபற்றிய விரிவான கடிதத்தை கையளித்துள்ளேன்.

இந்தியாவோடு ஒரு இராணுவ கூட்டு ஒப்பந்தத்தை செய்ய இலங்கை அரசு முயற்சிசெய்து வருகின்றது. அதற்காக மிகவும் தவறான தகவல்களை தொடர்ந்து பரப்பிவருகிறது.

விடுதலைப் புலிகளிடம் விமானங்கள் இருப்பதாகவும், அவை இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து போன்ற செய்திகளை எல்லாம் பரப்பத் தொடங்கியுள்ளன.

அவர்களிடம் அப்படி விமானங்கள் இருந்தாலும் இந்தியாவுக்கு எதிராக அல்லது இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிராக பயன்படுத்துவதென்பது கிடையவே கிடையாது. அதேநேரத்தில் சிங்கள அரசு பாகிஸ்தானிடமிருந்து, சீனாவிடமிருந்து கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள ஆயுதங்களை வாங்கியுள்ளது.

தவிர்க்கமுடியாத காரணத்தால் ஒரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பேராசிரியர் நந்தி காலமானார்



யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரும் ஈழத்தின் மூத்த படைப்பாளிகளில் ஒருவருமான செ.சிவஞான சுந்தரம் (நந்தி –வயது77) நேற்று மதியம்காலமானார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# சிறு விளம்பரம்


## தவறிவிட்டது

135, மூன்றாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த Dr. சண்முகதாஸ் என்பவருடைய லைசன்ஸ், மோட்டார்சைக்கிள் பதிவுப் புத்தகம், இன்சூரன்ஸ், வாகனவரி என்பன அடங்கிய கைப்பை (டயறி போன்றது) பருத்தித்துறை வீதி, நாவலர்வீதி, பிறவுண் வீதிகளில் 13-05-2005 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் P.ஜெயக்குமார் ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். T.P:- 2226896

(C/1184)

## ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P - 0779122836 நேரம்: காலை 9.00 - 8.30 வரை

(1176)

- பொலிமர் றபர் சீல்,
- பிளாஸ்டிக் போட்டில் வீட்டுப் பெயர்கள்,
- வாகன இலக்கங்கள்

சிறந்த முறையில் உங்கள் எண்ணப்படி விரைவில் செய்வித்துக்கொள்ள

**மருதா புத்தகசாலை**
தட்டாதெருச் சந்தி,
கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

(C/1186)

**மனோகரா** யாழ்ப்பாணம்
தித்திக்குதே புகழ் ஜீவா,
கஜாலா,ரகுமான்
மற்றும்
பலர் நடித்த
**ராம்**
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

**நாகம்ஸ்** சுன்னாகம்
ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்




கடைசி வாரமாக
காட்சி நேரம் :- (பு.நே.) 11.00, 3.00,7.00,

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த



பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)


# சிவகுமாரனின் நினைவு நாள் இன்று மாலை உரும்பிராயில்

யாழ்ப்பாணம்—

தமிழீழ போராட்ட வரலாற்றில் முதன் முதலாக எதிரியின் கைகளில் அகப்படக்கூடாது என்ற முடிவின் அடிப்படையில் சயனைட் அருந்தி தன்னைத்தானே அழித்துக் கொண்ட மாவீரன் பொன்னுத்துரை சிவகுமாரனின் 31 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் அவர் பிறந்த இடமான உரும்பிராயில் நடைபெறவுள்ளது.

இன்று காலை உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வுகளும், அதைத் தொடர்ந்து பிற்பகல் 5மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நினைவுக் கூட்டமும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் தமிழீழ மகளிர் இசைக்குழுவினரின் சங்கநாதம் இசை நிகழ்ச்சியும், சமகால அரசியல் கருத்துரைகளும் இடம்பெறவுள்ளன.

1974 ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது வீரசிங்கம் மண்டபத்தின் முன் ஏதும் அறியாத தமிழர்கள் 9 பேரின் படுகொலைக்குக் காரணமாகவிருந்த பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசேகரா மீது இரண்டு தடவைகள் கைக்குண்டு வீசிய குற்றச்சாட்டின்பேரில் இவர் பொலிஸாரால் தேடப்பட்டுவந்தார்.

இந்த நிலையில் இவரை தேசத்துரோகி காட்டிக் கொடுத்த போது, எதிரியிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்பதற் காக தன்னைத்தானே அழித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.


**ராஜா** யாழ்ப்பாணம்
லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி
லக்ஷ்மி, சுஜாதா, நிழல்கள்ரவி
நடித்த
**சூர்யா**



ஆக்ஷன் படம்
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

**நாகதன்வீ** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இலங்கையிலும்இந்தியாவிலும்ஓரேதின வெளிமீடாக
உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா
ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த
**அறிந்தும் அறியாமலும்**
காட்சிகள்
10.30,2.30,
6.30,9.30


# கேள்வி அறிவித்தல்

## மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

1. யாழ்ப்பாண அரசாங்க அதிபர் /மாவட்ட செயலரினால் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலை விபரம் | ஆகக்குறைந்த தரம் (ICTAD) | மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகை | மீளளிப்புச் செய்ய முடியாத தொகை |
|---|---|---|---|
| 01) கட்டடம் நிர்மாணித்தல் - மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம் | M 8 | 20000.00 | 750.00 |
| 02) நீதிமன்றக் கட்டடத் தொகுதி அமைத்தல் - மல்லாகம் நீதிமன்றம் | M 5 | 120000.00 | 750.00 |
| 03) சாட்சிக் கூடு, மலசலகூடம் அமைத்தல் - நீதிமன்றக் கட்டடத் தொகுதி - மல்லாகம் நீதிமன்றம் | M 9 | 10000.00 | 750.00 |
| 04) சுற்றுமதில், தண்ணீர்த் தாங்கி அமைத்தல் - மல்லாகம் நீதிமன்றம் | M 8 | 20000.00 | 750.00 |
| 05) கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை - இரு மாடிக் கட்டடம் நிர்மாணித்தல் | M 8 | 18000.00 | 750.00 |

2. கேள்விதாரர் நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரத்தில் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட இலங்கை கட்டட ஒப்பந்தகாரர் சங்க அங்கத்தவர்களாகவும் கேள்விதாரர் இருத்தல் வேண்டும்.

3. இக்ராட் வழிகாட்டல் முறைகளின்பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலைக் கொண்டிருக்கவேண்டும்.

4. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்வி ஆவணத் தொகுதிகளைத் திட்டப் பணிப்பாளர், மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் குறிப்பிட்ட ஒவ்வொரு வேலைக்குமான மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகையினையும், மீளளிப்புச் செய்ய முடியாத தொகையினையும் செலுத்தி 17-06-2005 ஆம் திகதி பிற்பகல் 2 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

6. கேள்வி ஆவணங்களைத் திட்டப்பணிப்பாளர், மாவட்ட புனர்வாழ்வு - புனரமைப்புச் செயலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும், அலுவலக நேரங்களில் இலவசமாகப் பார்வையிடலாம்.

7. கேள்விகள் இணைப் பிரதிகளில் அரக்கு முத்திரை பொறிக்கப்பட்ட உறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒருவர் ஆறு வேலைகளுக்கும் கேள்விகள் சமர்ப்பிக்கலாம்.ஒவ்வொரு வேலைக்கும் கேள்விகள் வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

8. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, யாழ். மாவட்டச் செயலகம்,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 20-06-2005 ஆம்திகதி பிற்பகல் 1.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும் அல்லது திட்டப் பணிப்பாளர் அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில்இடப்படல் வேண்டும். கேள்விகள் 20-06-2005 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் கேள்விதாரர் அல்லது அவரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

**க.கணேஸ்**
**அரசாங்க அதிபர் / மாவட்டசெயலர்,**
**தலைவர்,**
**மாவட்ட கேள்விச் சபை,**
**யாழ்ப்பாணம்.**

**மாவட்ட கேள்விச்சபை,**
**மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**
**03-06-2005**

(C/4185)

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

**அரிமாக் கழகம் - கோப்பாய்**

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் - கோப்பாய்**

**இணையும்**

# சான்றோர் கௌரவிப்பு



## டாக்டர் லயன் வை.தியாகராசா

**தலைமை: கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன்**
பீடாதிபதி (யாழ்ப்பாணம், தே.க.கல்லூரி)

**காலம்:** ஞாயிற்றுக்கிழமை. 05.06.2005 பி.ப. 4.30
**களம்:** யாழ்ப்பாணம், தேசிய கல்வியியற் கல்லூரிக் கலையரங்கு.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய், யாழ்ப்பாணம்

### நிகழ்ச்சி ஒழுங்கு

பி.ப. 4.30 – விழாநாயகர் மண்டபத்துக்கு அழைத்து வரல்
பி.ப. 4.35 – மங்கள விளக்கேற்றல்
பி.ப. 4.40 – பிரார்த்தனை
பி.ப. 4.45 – வரவேற்புரை S. அரவிந்தன் (முகிழ்நிலை ஆசிரியர்)
பி.ப. 4.50 – தலைமையுரை
பி.ப. 5.00 – பாராட்டுரைகள்
- ★ கலாநிதி கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் (சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ்.பல்கலைக்கழகம்)
- ★ திரு.பா.தனபாலன் (உபபீடாதிபதி யா.தே.க.கல்லூரி)
- ★ திரு.க.இராசதுரை அரிமாக் கழகம். (அதிபர் மத்திய கல்லூரி)
- ★ திருமதி புவனாவேல்நிதி (கல்வியியலாளர் யா.தே.க. கல்லூரி)
- ★ திரு.T.உதயசூரியன் (கௌரவ செயலாளர், இ.செஞ்சிலுவைச் சங்கம்)
- ★ திரு.கோ.சி.வேலாயுதம் (முன்னாள் கல்விப் பணிப்பாளர்)
- ★ திரு.இ.மயில்வாகனம் (இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்- கோப்பாய்)

பி.ப. 5.30 – சான்றோர் கௌரவிப்பு
"கருமத்திருதி"
என்ற பட்டம் வழங்கிக் கௌரவிப்பு.
யாழ்ப்பாணம், தேசிய கல்வியியற் கல்லூரி.


- ✸ அரிமாக் கழகம் கௌரவிப்பு
- ✸ இ.செஞ்சிலுவைச் சங்கம் கௌரவிப்பு
- ✸ சபையோர் கௌரவிப்பு
- ✸ விழா நாயகர் ஏற்புரை
- ✸ நன்றியுரை
- ✸ கலைநிகழ்ச்சிகள்
- ✸ கல்லூரிக் கீதம்

விளம்பர அனுசரணை:
**ஆர்.வி.ஜீ. மெடிக்கல்ஸ்**
**504 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

# முத்தலிப்பிடம் உளவாளியாக பணியாற்றியவரே அவர் தொடர்பான தகவல்களை வழங்கினாராம்!

கொழும்பு

படுகொலை செய்யப்பட்ட புலனாய்வுப் பிரிவின் கட்டளை அதிகாரியான முத்தலிப் பற்றிய தகவல்களைக் கொலையாளிகளுக்கு வழங்கியது அவரிடம் உளவாளியாகப் பணியாற்றிய ஒருவரே எனத் தெரியவந்துள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



முத்தலிப் சுடப்பட்ட பின்னர் (ஆவணப்படம்)

புலனாய்வு அதிகாரி முத்தலிப்பிடம் உளவாளியாகப் பணியாற்றிய ஒருவராலேயே முத்தலிப் பற்றிய தகவல்களைக் கொலையாளிகளுக்கு வழங்கப் பட்டிருப்பதாகக் கிடைத்திருக்கும் தகவல்கள் குறித்து இரகசியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முத்தலிப்பின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காக - நம்பிக்கைக்குரிய வகையில் பல தகவல்களை முத்தலிப்புக்கு வழங்கி, அவரின் போக்குவரத்துகள் பற்றிய தகவல்களை அந்த உளவாளி சேகரித்திருக்கலாம் என்ற பலத்த சந்தேகம் தங்களுக்கு எழுவதாக, முத்தலிப்பின் கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் இரகசியப் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித் தார்.

இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தி, விரிவான விசாரணைகளை மேற்கொள்ளும் வகையில் இரகசிய பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

முத்தலிப்பின் கொலை சம்பந்தமான தகவல்களைப் பெறும் நோக்கில் இராணுவத்தின் பல தரப்பு அதிகாரிகளிடமும் இரகசியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.


முத்தலிப் படுகொலை செய்யப்பட்ட தினத்தன்று, அவரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வேறு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

முத்தலிப்பின் பாதுகாப்பு படையினர் அன்றையதினம் அவரின் பாதுகாப்புக்குச் செல்லாது வேறு எந்த நடவடிக்கைகளுக்காகச் சென்றனர் என்றும், அவ்வாறு செல்லுமாறு அவர்களுக்கு யார் உத்தரவு பிறப்பித்தது என்றும் அறிந்து கொள்வது இந்த விசாரணைகளை முன்நகர்த்த பெரும் உதவியாக இருக்கும் எனவும், அதனால் அந்த வியடங்களை அறிய இரகசியப் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

## மேலும் 8 மில்லியன் டொலரை அவுஸ்ரேலிய அரசு வழங்கும்!

சிட்னி

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைப்புச் செய்வதற்காக இலங்கைக்கு மேலும் எட்டு மில்லியன் டொலர்களை வழங்குவதாக அவுஸ்ரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது.


டவுனர்

அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்ஸாண்டர் டவுனர் நேற்று முன்தினம் இது தொடர்பாக அறிவிப்பை வெளி யிட்டார்.

சுனாமி புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக அவுஸ்ரேலிய அரசாங்கம் ஏற்கனவே 10 மில்லியன் அவுஸ்ரேலிய டொலரை வழங்கியுள்ளது.

இதன்மூலம் அவுஸ்ரேலியா மொத்தமாக 18 மில்லியன் அவுஸ்ரேலிய டொலரை இலங்கைக்கு வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சன் தொலைக்காட்சியின் மீது தாக்குதல் நடைபெறவில்லை!

### நிர்வாகம் அறிக்கை

சென்னை

தமிழகத்திலிருந்து ஒளிபரப்பாகும் சன் தொலைக்காட்சியின் மீள் ஒளிபரப்பு நிலையம் எதுவும் வவுனியாவில் இல்லையென்று அந்தத் தொலைக் காட்சி நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.




வவுனியா - வைரவப்புளியங்குளத்தில் ரெலோ நிர்வாகத்தின்கீழ் இயங்கி வந்த தொலைக் காட்சி ஒளிபரப்பு நிலையம் மீது இனந்தெரியாத குழு வினர் கடந்த புதனன்று தாக்குதல் நடத்தினர்.

இதுகுறித்து இந்திய ஊடகங்கள் - சன் தொலைக் காட்சியின் மீள் ஒளிபரப்பு நிலையம் இலங்கையில் தாக்கப்பட்டதாகச் செய்திகளை வெளியிட்டிருந்தன. இதற்கு மறுப்புத் தெரிவித்திருக்கும் சன் தொலைக் காட்சி நிர்வாகம் - தமது தொலைக் காட்சி நிர்வாகத்திற்கான கிளையோ, மீள் ஒளி பரப்பு நிலையமோ இலங்கையில் இல்லை என்றும் வவுனியா தாக்குதலுக்கும் சன் தொலைக்காட்சி நிறுவனத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்றும் கூறியுள்ளது.

## கண்ணிவெடி அகற்றும்பணிகளுக்கு புதியவாகனங்கள் அன்பளிப்பு !

கொழும்பு

வடக்கு - கிழக்குப் பகுதி களில் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு ஜப்பான் அரசாங்கம் 19 வாகனங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த வாகனங்கள் 44 மில்லியன் ரூபா பெறுமதியானவையென புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜெயசிங்க தெரிவித்தார்.

கண்ணிவெடி அகற்றும் பணிகளின் போது, இடம்பெறும் விபத்துக்களுக்கான மருந்துப் பொருட்கள் மற்றும் கண்ணிவெடி அகற்றுவதற்கான கருவிகளைக் கொண்டு செல்வ தற்கு இந்த வாகனங்கள் பயன்படுத்தப்படும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியில் 10 இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் ஈடுபட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர்

இதற்கென நவீன கருவிகளும், உள்ளூர் முறைகளும் கையாளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

இதுவரை காலமும் வடக்கு-கிழக்குப் பகுதிகளிலிருந்து 40 ஆயிரத்துக்கும் அதிகமான கண்ணிவெடிகள் அகற்றப் பட்டிருப்பதாகவும் - புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச் சின் செயலாளர் எம். எஸ். ஜெயசிங்க மேலும் தெரிவித்தார்.

## முத்தலிப் கொலைக்காகவே வடிவமைக்கப்பட்ட துப்பாக்கி!

### அரச பகுப்பாய்வுத் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு

மட்டக்களப்பிலிருந்து கடந்த இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு முன்னர் கொழும்புக்கு வந்த விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்களால் தான் - இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளை அதிகாரி லெப்.கேணல் முத்தலிப் கொல்லப்பட்டதாக இராணுவ உளவுப் பிரிவு தெரிவித்துள்ளது.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி - இந்தத் தாக்குதலுக்கென்றே புதிதாகத் தயாரிக்கப்பட்டதென அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தில் செய்யப்பட்ட ஆரம்பகட்ட சோதனையிலிருந்து தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட 5.56 மி.மீற்றர் ரக துப்பாக்கி - ரவை எப்.என்.சி., எம்.16 போன்ற ஆயுதங்களுக் குப் பாவிக்கப்படுவதெனவும், எம்.16 ரக துப்பாக்கியின் சுடு குழலை வெட்டி - தாக்குதலுக்குத் தேவையான வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கலாமெனப் பகுப்பாய்வுத் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த ரக ரவையைப் பாவிக்கும் துப்பாக்கிகள் ரி-56 ரக துப்பாக்கியை விட அதிக சக்தி வாய்ந்ததெனவும், இதிலிருந்து ரவைகள் வெளிப்படும் வேகம் அதிகம் என்பதோடு - அண்மையாகவோ அல்லது தொலைவிலிருந்தோ சுடலாம் எனவும் அவர் தெரிவித்தார்.


எப்.எஸ்.சி.துப்பாக்கி

இந்தத் தாக்குதலை மட்டக்களப்பிலுள்ள விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவரே வழிநடத்தியதாக படையினருக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும், முத்தலிப்பை கொலை செய்ய வந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் நால்வர், முத்தலிப் தங்கியிருந்த வீட்டைச் சுற்றி உளவு பார்த்திருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. தாக்குதல் இடம் பெற்ற பகுதியில்வேறொரு வாகனத்தில் மற்றைய விடுதலைப் புலிகள் இருந்திருக்கலாமென அரச புலனாய்வுப் பிரிவு சந்தேகம் அடைந்துள்ளது.

இந்தக் கொலை தொடர்பாக சம்பவ இடத்தில் நின்ற 40 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (தே)

## முத்தலிப் கொலையுடன் சம்பந்தப்பட்டதாக ஐந்து தமிழ் இளைஞர்கள் கைதாகினர்!

கொழும்பு

இராணுவப்புலனாய்வுத் துறையின் முதலாவது பற்றாலியன் கட்டளை அதி காரி லெப்.கேணல் முத்தலிப்பின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டதாகக் கூறி, மாத்தளையில் நேற்றுமுன்தினம் ஐந்து தமிழ் இளைஞர்களைப் பொலி ஸார் கைதுசெய்துள்ளனர்.



மாத்தளை சிரேஷ்ட பொலிஸ் அத் தியட்சகர் ஹெக்டர் தர்மசிறியின் உத்தர வின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இவர் கள் ஐவரும் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் வடக்கு-கிழக்கு மற்றும் கொழும்பைச் சேர்ந்தவர் களாவர். தங்களை அடையாளப் படுத்து வதற்கான ஆவணங்களை வைத்திருக் காததாலேயே இவர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாத்தளை, இரத்தோட்டை, நாவல மற்றும் மாவெல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பொலிஸார் மாத்தளை மஹா தெவட்டவிகார வீதி, போமலுவ வீதி மற்றும் அகலவத்தை ஆகிய இடங்களில் மேற் கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு லெப். கேணல் முத்தலிப்பின் கொலையுடன் சம்பந்தமுள்ளதா என்பது பற்றி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக மாத்தளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

## பாகிஸ்தான் தூக்குக்கயிறுகளை பாவிப்பதில்லையெனத் தீர்மானம்

கொழும்பு

தூக்கு மரத்துக்குப் பயன்படுத்தப்படுவதற்குப் பாகிஸ்தானிலிருந்து இலவசமாகக் கிடைத்த கம்பாங்கயிற்றைப் பாவிப்பதில்லையென சிறைச்சாலை அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

பாகிஸ்தானின் கம்பாங்கயிறு இலங்கையிலுள்ள தூக்கு மரங்களுக்குப் பொருந்தாது எனக் கைத்தொழில் தொழில்நுட்ப அதிகாரி சபை மூலம் செய்யப்பட்ட பரிந்துரையை அடுத்து, அதனைப் பாவிப்பதில்லையென முடிவெடுக்கப்பட்டதாகச் சிறைச்சாலையின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதன்படி தூக்கு மரத்துக்குத் தேவையான கயிறு அரச வர்த்தக ஆக்கக் கூட்டுத்தாபனத்தில் தயாரிக்கப்பட்டுவருவதாகவும் அவர் தொரிவித்தார்.

அத்துடன் தூக்கு மரத்துக்குத் தேவையான தோலினாலான கட்டும் பட்டியை, இலங்கையில் பிரசித்தமான தோற்பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனம் தயாரித்து வருவதாகச் சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (தே)

# மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக பாகிஸ்தான் 336 ஓட்டங்கள்!



ஜமெக்கா

மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் படுதோல்வியடைந்த பாகிஸ்தான் அணி-இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அபாரமாக ஆடி முதல்நாள் ஆட்டத்தில் 6 விக்கெட் இழப்புக்கு 336 ஓட்டங்களைக் குவித்தது.

சபீனா பார்க் மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் - பாகிஸ்தான் அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய சொகைப் மலிக் - யசீர் ஹமீட் ஜோடி ஆரம்பத்திலேயே மேற்கிந்தியத் தீவுகளின் பந்து வீச்சாளர்களை எதிர்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

அணியின் ஸ்கோர் 16ஆக இருந்தபோது - முதல் விக்கெட்டாக யசீர் ஹமீட் வீழ்த்தப்பட்டார். இவர் 18 பந்துகளில் 14 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

அடுத்து யுனுஸ்கான் களமிறங்கி அபாரமாக ஆட, எதிர்முனையில் நின்ற சொகைப் மலிக் பெரிதும் திணறினார். அணியின் ஸ்கோர் 43ஆக உயர இவரது விக்கெட்டை கொலிமோர் கைப்பற்றினார்.

46 பந்துகளில் 13 ஓட்டங்களை எடுத்த மலிக் ஆட்டமிழந்து சென்றபின்னர், ஆட்டத்தில் சூடுபிடிக்க ஆரம்பித்தது. யுனுஸ்கானுடன் இணைந்த இன்சமாம்-உல்-ஹக் வேகமாக ஓட்டங்களைக் குவிக்க ஆரம்பித்தார்.



எனினும் அணியின் ஸ்கோர் 130ஆக அதிகரித்தபோது - இன்சமாம் ஆட்டமிழந்தார். கைலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்த இன்சமாம் 60 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 50 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து அசீம் கமல் களமிறங்கி - நிதானமாக ஆடத் தொடங்கியதால் ஓட்டக் குவிப்பு மந்தமானது. ஆனாலும் இந்த ஜோடி நிதானமாக நின்று ஆடியது.

ஸ்கோர் 247ஆக உயரும் போது சதமடித்த யுனுஸ்கான் விக்கெட்டைப் பறிகொடுத்து வெளியேறினார். கொலிமோரின் பந்து வீச்சில் ஹின்ட்ஸிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்த இவர் 190 பந்துகளில் 14 பவுண்டரிகளுடன் 106 ஓட்டங்களை எடுத்தார்.

ஐந்தாவது விக்கெட்டாக அப்ரிடி களமிறங்கினார். ஆனால் அவர் பெரிதாகப் பிரகாசிக்கவில்லை. அதற்கிடையில் அசீம் கமல் அணியின் ஸ்கோர் 260ஆக இருந்தபோது - கொலிமோரின் பந்துவீச்சில் போல்டாகி ஆட்டமிழந்து சென்றார்.

இவர் 122 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 51 ஓட்டங்களை எடுத்தார். இதன் பின்னர் ஸ்கோர் 298ஆக இருந்தபோது அப்ரிடி ஆட்டமிழந்தார். கொலிமோரின் பந்துவீச்சில் பிரவுனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த அப்ரிடி 44 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 33 ஓட்டங்களை எடுத்தார்.

இதன்பின்னர் களமிறங்கிய அப்துல் ரசாக் - கம்ரன் அக்மல் ஜோடி ஆட்டநேரமுடிவுவரை ஆடிக் கொண்டிருந்தது. ரசாக் 19 ஓட்டங்களுடனும், அக்மல் 24 ஓட்டங்களுடனும் களத்தில் நின்றனர்.

90 ஓவர்கள் முடிவில் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது - பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 336 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் உதிரிகளாக 26 ஓட்டங்கள் விட்டுக்கொடுக்கப்பட்டன.

பந்துவீச்சில் கொலிமோர் 22 ஓவர்களில் 55 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், பவல் மற்றும் கைல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# பிரெஞ் ஓபன் ரெனிஸ்

## ஹெனின் இறுதிப் போட்டியில்: ரோஜர் பெடரர் வெளியேறினார்!





பாரிஸ்

பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டி இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. பெண்கள் பிரிவில் இறுதிப் போட்டிக்கு பிரெஞ் வீராங்கனை மேரி பியர்ஸ், பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்ரின் ஹெனின் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.



அரையிறுதிப் போட்டியில் ரபேரியில் ரஷ்ய வீரர் நிகோலாய், ஆர்ஜென்ரீன வீரர் மரியானோ புயர்டோ ஆகியோர் மோதினார்கள். இதில் மரியானோ வெற்றிபெற்றார்.

இன்னொரு போட்டியில் உலகின் முதல்நிலை வீரரான சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ரோஜர் பெடரர், ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ராபெல் நடாலை எதிர்கொண்டார். இவர் தரவரிசையில் 4ஆம் இடத்தில் உள்ளார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் ராபெல் நடால் 6-3, 4-6, 6-4, 6-3 என்ற ஸ்கோரில் ரோஜர் பெடரரை தோற்கடித்தார். இதன் மூலம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற ராபெல் நடால் இன்று




நடைபெறும் இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீன வீரர் மரியானோவுடன் மோதுகிறார்.

பிரெஞ் ஓபன் ரெனிஸில் இந்தியாவிலிருந்து பங்கேற்ற சானியா மிர்சா, மகேஷ் பூபதி ஆகியோர் பிரகாசிக்காதபோதிலும் லியாண்டர் பயஸ் கலப்பு இரட்டையர் பிரிவில் இறுதிப் போட்டிவரை வந்தார். அமெரிக்காவின் முன்னாள் நட்சத்திர வீராங்கனை மார்டினா நவரத்திலோவாவுடன் ஜோடி சேர்ந்து ஆடினார்.

இறுதிப் போட்டியில் இந்த ஜோடி டேனிலா (சுலாவாக்கியா), பேப்ரிஸ் சாண்ட்ரோ (பிரான்ஸ்), ஜோடியை எதிர்கொண்டது. இதில் டேனியா-பேப்ரிஸ் ஜோடி லியாண்டர் ஜோடியை 3-6, 6-3, 6-2 என்ற செட்களில் வென்று, சம்பியன் பட்டத்தை வென்றது.

# 104 ஓட்டங்களுக்குள் பங்களாதேஷ் சுருண்டது!



லண்டன்

இங்கிலாந்தில் நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 104 ஓட்டங்களுக்குள் பங்களாதேஷ் அணியைச் சுருட்டிய இங்கிலாந்து அணி- 48 ஓவர்களில் 269 ஓட்டங்களை அதிரடியாகக் குவித்தது.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் - நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி - முதலில் துடுப்பெடுத்தாட பங்களாதேஷை அழைத்தது.

இங்கிலாந்து அணியின் பந்து வீச்சாளர்கள் ஹர்மிசன், ஹொகாட் ஆகியோர் பங்களாதேஷ் அணியைத் திக்குமுக்காடச் செய்தனர்.


ஸ்கோர் 17ஆக இருந்தபோது முதல் விக்கெட்டை இழக்கத் தொடங்கிய பங்களாதேஷ் அணி 39.5 ஓவர்களில் 104 ஓட்டங்களை எடுப்பதற்குள் சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது.



ஜாவிட் ஓமர் 37 ஓட்டங்களையும், காலித் மசூத் 22 ஓட்டங்களையும் அதிகபட்சமாக இரட்டை இலக்க ஓட்டங்களை எடுத்தனர். நபீஸ் இக்பால் 7, ஹபிபுல் பசார் 6, அஷ்ரபுல் 3, சாலே 2, அப்ரப் அகமத் 6, ரபீக் 9, பாஸ்யா 0, மொர்ராசா 1 ஓட்டத்தையும் எடுத்தனர். உதிரிகளாக 11 ஓட்டங்கள் பங்களாதேஷ் அணிக்குக் கிடைத்தன.

ஹர்மிசன் 5 விக்கெட்டுக்களையும், ஹொகாட் 3 விக்கெட்டுக்களையும், ஜோன்ஸ், பிளின்ரொப் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இங்கிலாந்து அணி 18 ஓட்டங்களை எடுத்தநிலையில் - முதல் விக்கெட்டை இழந்தது. 30 பந்துகளில் 8 ஓட்டங்களை மட்டுமே எடுத்து தடுமாறிய ஸ்ரரஸ் ஆட்டமிழந்தபின்னர், மைக்கல் வோகன் களமிறங்கினார்.



ட்ரெஸ்கொதிக் - வோகன் ஜோடி அடித்து ஆடி ஓட்டங்களைக் குவித்தது. ஸ்கோர் 105ஆக இருந்தபோது இரண்டாவது விக்கெட்டை பங்களாதேஷ் அணி வீழ்த்தியது. மைக்கல் வோகன் 40 பந்துகளில் 44 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் ட்ரெஸ்கொதிக்குடன் பெல் இணைந்து கொண்டார். இந்த ஜோடி அபாரமாக ஓட்டங்களைக் குவித்தது. ஸ்கோர் 260ஆக உயரும் வரை இந்த ஜோடியைப் பிரிக்கமுடியவில்லை.

மூன்றாவது விக்கெட்டாக வீழ்த்தப்பட்ட ட்ரெஸ்கொதிக் 148 பந்துகளில் 21 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 151 ஓட்டங்களை எடுத்தார்.

நேற்றுமுன்தினம் முதல்நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது - இங்கிலாந்து அணி 3 விக்கெட் இழப்புக்கு 269 ஓட்டங்களை எடுத்தது.

# விளையாட்டு


31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 28 ❄ 06 ❄ 1977

மறைவு 06 ❄ 05 ❄ 2005

அமரர்

திருமதி ஜெயசுதா அம்பிகைபாகன்

06.05.2005 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று 05.06.2005 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்களைக் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

'சுதாபவனம்'
பாடசாலை வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.
T.P: NO - 021 - 2226499

(1182)

கணவர்,
பெற்றோர், சகோதரர்கள், மாமி,
மைத்துனர்கள், மைத்துனிகள்

# ஐரோப்பிய கூட்டுறவு ஆலோசகர் நேற்றுமுன்தினம் குடாநாட்டுக்கு விஜயம்

யாழ்ப்பாணம்—

ஐரோப்பிய ஒன்றியத்தின் அபிவிருத்தி மற்றும் கூட்டுறவு ஆலோசகர் நேற்று முன்தினம் யாழ்.குடாநாட்டுக்கு வருகை தந்து, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அபிவிருத்தி மற்றும் கூட்டுறவு ஆலோசகர் மரியம் ஹொமையூம், இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜிலெக் வேட்றன் ஆகிய இருவருமே யாழ்.குடாநாட்டுக்கு வருகை தந்தனர். தமது அமைப்பின் மூலம் வழங்கப்படும் நிதி உதவிகளால் இங்கு நடைபெறுகின்ற செயற்திட்டங்களைப் பார்வையிட்டனர். தொடர்ந்து மதியம் 1 மணியளவில் யாழ்.இணையத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதற்கமைய யாழ்.குடாநாட்டில் வெளிநாட்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தொடர்பாக விபரிக்கப்பட்டது. குறுகிய காலத்திலேயே திட்டங்கள் நடைபெறுகின்றன. இவ்வாறான திட்டங்கள் தொடர்ந்து நடைபெறுவதாகத் தெரியவில்லை.

எனவே திட்டங்களை நீண்ட காலத் திட்டங்களாக நடைமுறைப்படுத்த வேண்டும். அல்லது உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து செய்தால், அவர்கள் அவ்வாறான செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லமுடியும். குறிப்பாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் தேவைகளுக்கேற்ப உதவிகள் வழங்கப்படவேண்டும் எனவும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளால் சுட்டிக் காட்டப்பட்டது.

இந்தக் கருத்துக்களை தாம் கருத்தில் கொள்வதாக ஐரோப்பிய யூனியனின் அபிவிருத்தி, மற்றும் கூட்டுறவு, இலங்கை ஐரோப்பிய நாடுகளுக்கான தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் மக்களின் நன்மை கருதியும், அவர்களின் தகவல்களை வெளி உலகுக்குத் தெரியப்படுத்தும் நோக்குடனும், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தளம் ஒன்றும் திறந்து வைக்கப் படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.



# மீள் விண்ணப்பதாரிகளாலேயே அதிகளவில் பிறப்பு - இறப்பு படிவங்களுக்குத் தட்டுப்பாடு

## உதவிப் பதிவாளர் நாயகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்—

சுனாமி அனர்த்தம் காரணமாக ஆவணங்களை இழந்தவர்களுக்கு, அவற்றைப் பெற்றுக் கொடுக்க பல விண்ணப்பப் படிவங்கள் தேவைப்பட்டதாலேயே பிறப்பு மற்றும் ஏனைய பதிவுப் பத்திரங்கள் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களுக்கு செயலகத்தில் தட்டுப்பாடு நிலவுவதாக வடக்கு - கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் சதாசிவஐயர் தெரிவித்தார்.

பிறப்பு மற்றும் ஏனைய பதிவுச்சான்றிதழ்கள் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களுக்கு யாழ்.செயலகத்தில் தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுவது தொடர்பாக, உதவிப் பதிவாளர் நாயகத்திடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

சுனாமியால் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக ஆவணங்களை இழந்தவர்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுக் கும் நோக்குடன் பல விண்ணப் பப் படிவங்கள் தேவைப்பட்டதால், வழமையைவிட மேலதிகமாக பல விண்ணப்பப் படிவங்கள் அச்சிடப்படவேண்டிய தேவை ஏற்பட்டது. இருந்தும் விண்ணப்பப்படிவங்களுக்குப் பற்றாக்குறை நிலவுவது தவிர்க்க முடியாமல் உள்ளது. விரைவில் போதியளவு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை போன்றனவற்றைப் பெறுவதற்கு திணைக்கள விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்க வேண்டும் என்பது கட்டாயம் என்றும் பிறப்பு மற்றும் ஏனைய சான்றிதழ்களைப் பெறுவதற்கு இந்த நடைமுறை இல்லை எனவும், $A_4$ அளவு தாளிலே தேவையான விபரங்களை எழுதி, உரிய பெறுமதிக்கு முத்திரை ஒட்டி, செயலகப் பிறப்பு அத்தாட்சிச் சான்றிதழ் பெறும் பிரிவில் ஒப்படைக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

பொதுவாக மாவட்ட பதிவகங்களில் வேலைப்பளு இல்லை. எனவே விண்ணப்பித்து இரு வாரங்களில் சான்றிதழ் அல்லது அதற்கான பதில் விரைவாகக் கிடைக்குமெனவும், தாமதமாயின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும், உதவிப் பதிவாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## சண்டிலிப்பாய் பிரதேசத்தில்

# கமநல நிலையம் அமைப்பதற்கு வசதி செய்யுமாறு கோரிக்கை!

சண்டிலிப்பாய்—

சண்டிலிப்பாய் பிரதேசதுக்கு என கமநல கேந்திர நிலையம் ஒன்றை அமைப்பதற்குப் பொருத்தமான ஓர் இடத்தை ஒழுங்கு செய்து தருமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரிடம் அந்தப்பகுதி விவசாய சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேசத்துக்கென கமநலகேந்திர நிலையத்தை அமைப்பதற்கு கோயில் காணி ஒன்று கிடைத்துள்ளதாகவும், ஆனால் இந்தக் கோயில் காணியானது இந்த நிலையம் அமைக்கப் போதுமானதாக இல்லாமல் இருக்கிறது.

இதனால் தாம் கொள்வனவு செய்த நிதியைத் திரட்டி வைத்திருப்பதாகத் தெரிவித்த அந்தப் பகுதி விவசாய சம்மேளனம், தேவையான காணியைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரிடம் கோரியுள்ளது.

(44)

# சுகாதாரம் பேணாத உணவகங்களை சீல் வைத்து மூடுவதற்கு தீர்மானம்!

யாழ்ப்பாணம்—

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து உணவகங்களும் பரிசோதிக்கப்பட்டு, அவர்களின் உணவக சுகாதாரதரம் தொடர்பான படிவம் ஒன்று வழங்கப்படவுள்ளது. இந்தப் படிவத்தை தமது கடைகளில் அனைத்து மக்களும் பார்க்கக் கூடிய வகையில் வைக்க வேண்டும் எனவும், உரிய முறையில் சுகாதாரம் பேணப்படாத அனைத்துக் கடைகளும் சீல் வைத்து மூடப்படும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று யாழ். மேலதிக நீதிமன்றில் நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் தலைமையில், யாழ். மாவட்டத்தின் தற்போதைய சுகாதார நிலைமைகள் தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் யாழ். மாநாகரசபை ஆணையாளர் க.குணராசா, வைத்திய கலாநிதி சொலமன், பொதுச் சுகாதார பரிசோதகர் எனப் பலர் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டில் உள்ள அநேகமான உணவகங்களில் சுத்தம் பேணுவது குறைவாகவே உள்ளது. அதாவது - சமையலுக்குப் பயன்படுத்தப்படும் நீர் சுத்தமான நீராக இருக்க வேண்டும். உணவகங்களில் உண்ண வருபவர்களுக்கு அதிகமான பலகார வகைகளை வைக்கப்படுகின்றபோது எல்லா உணவுகளிலும் அவர்கள் கை வைப்பதனால் உணவு அசுத்தமடைகிறது.

எனவே இவ்வாறான நடைமுறையை நீக்கி, உண்பவருக்குப் போதுமான உணவை அவரே சொல்லிப் பெற்றுக்கொள்ள வேண்டும், உணவுப் பொருட்களைப் பரிமாறுபவர் கைகளால் எடுப்பதைத் தவிர்த்து, அதற்குரிய கரண்டிகளைக் கொண்டு பரிமாறவேண்டும். உணவு வகைகளைத் திறந்து வைப்பதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இதைவிட உணவகங்களின் சமையல் அறைகள் காற்றோட்டம் கொண்டதாக அமைய வேண்டும். சமையலில் ஈடுபடுபவர்கள் அதிக வியர்வை சிந்தி வேலை செய்வதை முற்றாகத் தவிர்ப்பதோடு பாத்திரங்களும் சுத்தமாக இருத்தல் வேண்டும் என்பன போன்ற முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக- உணவகங்களின் உரிமையாளர்கள் பணியாளர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்றும் நடைபெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தரைக்கீழ் நீர் மாசடையும் வீதம் யாழ்.குடாநாட்டில் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக தரைக்கீழ் நீர் மாசடையும் வீதம் அதிகரித்துச் செல்கிறது என, யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணத்தில் 15 ஆண்டுகளுக்குப் பயன்படுத்தக்கூடியளவு நன்னீரே உள்ளது. இந்தத் தரைக்கீழ் நீரானது, மக்களது கவனமற்ற செயற்பாடுகாரணமாகவே மாசடையும் நிலை ஏற்பட்டிருக்கிறது. யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பிரதான வீதியில் 70 வீதமும், ஸ்ரான்லி வீதியில் 50 வீதமும், நாவலர் வீதியில் 40 வீதமான தரைக்கீழ் நீர் மாசடைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

தரைக்கீழ் நீரை மாசுபடுத்தும் செயற்பாடுகளைக் குறைத்து, நீண்டகாலம் பயன்படுத்தக்கூடியதாக உதவுமாறு மக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## நெடுந்தீவு

# விளையாட்டு உத்தியோகத்தருக்கு சேவை நலன் பாராட்டு வைபவம்!



நெடுந்தீவுப் பிரதேசத்தில் கடந்த ஐந்து வருடகாலமாக விளையாட்டு உத்தியோகத்தராகக் கடமையாற்றி, இடமாற்றம் பெற்றுச் சென்ற க.விஜிதரனின் சேவை நலன் பாராட்டு வைபவம் - கடந்த வாரம் நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை மண்ட பத்தில் ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினரால் நடத்தப்பட்டது.

கழக விளையாட்டு தலைவி இ.பிரமாலட்சுமி தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் - தற்போதைய விளையாட்டு அலுவலர், கிராம அலுவலர் தென்னிந்திய திருச்சபை போதகர், பாடசாலை அதிபர்கள் மற்றும் கழக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் போது கடந்த ஐந்து வருடசேவை தொடர்பாக வாழ்த்துரைகளை விருந்தினர்கள் வழங்கியதுடன், சேவையைப் பாராட்டி நினைவாக வெற்றிக் கேடயம் மற்றும் நினைவுப் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் ஒப்பந்த அடிப்படையில் இணைப்பு!

யாழ்ப்பாணம்—

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் துரித அபிவிருத்தித்திட்டச் செயலாக்கலுக்கு ஆளணிப்பற்றாக்குறை அளவுக்கு அதிகமாகக் காணப்படுகிறது. இந்தக் குறைபாடுகளைச் சீர் செய்யும் வகையில் யாழ்.அரச அதிபர் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக, ஒப்பந்த அடிப் படையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் ஓய்வு பெற்ற கிராம சேவை உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவைக்கு அமர்த்தப்படவுள்ளனர்.

ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் பல கிராம சேவை உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடமாகவே உள்ளன. உதாரணமாக -கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 35 கிராம சேவை உத்தியோகத்தர்களில் 11 பேர் ஓய்வு பெற்றுவிட்டனர். இந்த இடங்கள் இன்றுவரை வெற்றிடமாகவேயுள்ளன. இந்தத்தொகை இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் 13 ஆக உயரவுள்ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு, ஓய்வு பெற்ற கிராம சேவை உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுவதற்கு நேர்முகப்பரீட் சகளை நடத்துமாறு யாழ்.அரச அதிபரின் கடிதம் கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குக் கிடைத்ததன் காரணமாக, 8 பேருக்கு நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டது. இவர்களுக்கான நியமனங்களை யாழ். அரசாங்க அதிபர் வெகுவிரைவில் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(13)

# வருடாந்த மஹோற்சவம்

பருத்தித்துறை—

பொலிகண்டி கந்தவனம் அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம்- எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. (17)

# விளையாட்டு அரங்கம்



## பயணங்கள் முடிவதில்லை



மஹெல ஜெயவர்த்தன
கரங்களை இணைத்துக்கொள்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் புதிய பயிற்றுநர் அவுஸ்ரேலியாவின் ரொம் மூடி. ஆனால் இவரது தெரிவு பற்றிய நெருடல் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. அதாவது இந்தியக் கிரிக்கெட் நிர்வாகத்தால் வேண்டாமென ஒதுக்கப்பட்டவர் தானா இலங்கைக்குக் கிடைத்தார் என்ற மாதிரியான அபிப்பிராயம் ஒன்று நிலவுகிறது. நிதிசார்ந்த வகையில் ஒப்பிடும்போது கிரெக் சப்பலுக்கான விலை மிக அதிகம் தான். அதேபோல பிரபல்யம் என்ற வகையிலும் கிரெக் சப்பல் மேலோங்கி நிற்கிறார். என்றாலும், பயிற்றுநர் என்ற வகையில் திறமை பொறுத்து ஒப்பிட வேண்டிய அவசியமில்லை என்ற கருத்தும் நிலவுகின்றது. மேலும் இந்திய கிரிக்கெட் நிர்வாகம் தனது தெரிவை முதலில் முடிக்கட்டும். அதன்பின் நாங்கள் தெரிவைச் செய்கிறோம் என்று இலங்கையின் இடைக்கால கிரிக்கெட் சபை கூறியதும். இலங்கைக்கான பயிற்றுநர் மீது அனாவசிய அபிப்பிராயங்களுக்கு வழிவகுத்து விட்டது.

எது எவ்வாறாயினும் 2007 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளும் புதிய பயிற்றுநர் மீதான சுமை தான். அந்த வகையில் ரொம் மூடி மூன்றாவது உலகக்கிண்ணப் போட்டியுடன் தன்னை இணைக் கொள்ளப்போவது தெரிகிறது. முன்னதாக 1987 ஆம் ஆண்டு அலன் போடர் தலைமையின் கீழ் இறுதியாட்டத்தில் இங்கிலாந்தை ஏழு ஓட்டங்களால் வென்ற அவுஸ்ரேலிய அணி யில் இவரும் ஒரு அங்கத்தவர். இந்த இறுதியாட்டம் நடை பெற்றது கொல்கத்தாவில்.

அடுத்து 1999 இல் இங்கிலாந்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பாகிஸ்தானை எட்டு விக்கெட்டுக்களால் ஸ்ரீவ்வோ தலைமையிலான அவுஸ்ரேலிய அணி வென்ற போது அந்த அணியிலும் ரொம் மூடி ஒரு அங்கத்தவர். இந்த சகலதுறை ஆட்டக்காரர் டெஸ்ட் ஆட்டங்கள் குறைவாக விளையாடியிருந்தாலும், ஒருநாள் அணியில் முக்கியமான வீரராகக் கருதப்பட்டவர். தற்போது இங்கிலாந்தின் வூஸ்டர் ஷயர் கவுண்ரியின் பயிற்றுநராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தபோது, ஒரு நாட்டின் அணியை பயிற்றுவிக்கும் சந்தர்ப்பம் இவருக்குக் கிடைத்தது.

இங்கிலாந்தின் பயிற்றுநர் டங்கன் பிளெட்சர் ஓய்வுபெறக்கூடும் என்று அரசல் புரசலாக செய்திகள் வெளிவந்தபோது அந்த இடத்தை ரொம் மூடி நிரப்பக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஸ்ரீவ்வோவின் ஒப்பீட்டின்படி கிரெக் சப்பலை விட ரொம் மூடி சிறந்த பயிற்றுநர் என்று குறிப்பிடப்படுகின்றது. அதோடு அண்மைக்காலம் வரை கிரிக்கெட் வீரராக இருந்தவர் என்ற வகையில் கூடுதலான விடயம் புரிந்தவராக இவர் இருப்பார் என்று நம்பலாம். ரொம் மூடி தனது நியமனத்தை ஒரு சவாலாகவே எடுத்துக் கொண்டுள்ளேன் என்று கூறியிருக்கிறார். இந்தப் பிராந்தியத்தின் கிரிக்கெட் திறமை பற்றி தான் நன்கறிந்துள்ளதாயும், இதனை மெருகூட்டத் தனக்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

ஏதோ ஒரு வகையில் ரொம் மூடிக்கும், கிரெக் சப்பலுக்கும் மறைமுகமான போட்டியொன்று உருவாகியுள்ளது.

எந்த அவுஸ்ரேலியர் கூடுதல் புள்ளியைப் பெறப்போகிறார் என்பது போகப்போகத் தான் தெரியும்.

– ஜோசப்கிருஷ்ணா.



ரொம் மூடி
இலை மறை காய்

## முடியாததென்பது பிடிக்காத சொல்

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் கடந்த ஒன்றரை வருட காலப் பகுதியை கவனத்தில் எடுத்துக்கொண்டால், சில வரலாற்று ரீதியிலான வெற்றிகள் வெறப்பட்டிருப்பதை அவதானித்துக் கொள்ள முடியும்.

இந்த வகையில் 1968/ 69 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கிந்தியத்தீவுகள் சென்ற இங்கிலாந்து அணியே கடைசியாக டெஸ்ட் தொடரை வென்றிருந்தது. அதன் பின்னர் மேற்கிந்தியத் தீவுகளில் டெஸ்ட் தொடரை வெல்வதென்பது இங்கிலாந்து அணியால் சாத்தியப்படாமலே போய்விட்டது.

இந்தச் சோதனைக்கு முடிவுகட்டும் விதமாக 2003/ 04 மார்ச் மாதப் பகுதியில் மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்த இங்கிலாந்து அணி 36 வருடங்களின் பின்னர் அங்கு டெஸ்ட் தொடரைக் கைப்பற்றி சாதனை புரிந்தது.

அவ்வாறே 2004 ஒக்டோபர் மாதமும் அவுஸ்ரேலிய கிரிக்கெட்டுக்கு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். சொந்த மண்ணில் அவுஸ்ரேலியாவுக்கு தண்ணி காட்டிய இந்திய அணியின் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது இந்தக் காலப்பகுதியில் தான்.



ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

1969/70 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பில்லோறி தலைமையிலான அவுஸ்ரேலிய அணியே இந்திய மண்ணில் கடைசியாக டெஸ்ட் தொடரை வென்ற அணியாக விளங்கியது.

அதன் பின்னர் ஹிம் கியூஸ், அலன் போடர், மார்க் ரெய்லர், ஸ்ரீவ்வோ போன்ற அவுஸ்ரேலிய கிரிக்கெட் ஜாம்பவான்களாலேயே இந்தியாவை சொந்த மண்ணில் ஆட்டிப் படைக்க முடியவில்லை. ஆனால் 35 வருடங்களின் பின்னர் இவர்களுக்கெல்லாம் கிடைக்காத பெருமையை தன்வசப்படுத்தினார் அவுஸ்ரேலிய விக்கெட் காப்பாளர் அடம் கில்கிறிஸ்ட். 2004 ஒக்ரோபர் காலப்பகுதியில் இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் செய்த அணியில் ரிக்கி பொண்டிங் உபாதை காரணமாக மூன்று டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஒதுங்கிக்கொள்ள, தற்காலிகக் கப்டனாகப் பதவியேற்ற கில்கிறிஸ்ட் அவுஸ்ரேலிய அணியின் நீண்ட நாள் கனவை நனவாக்கினார்.

அவ்வாறே இந்த வருட ஆரம்பத்தில் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட மைக்கல் வோண் தலைமையிலான இங்கிலாந்து அணியும் இங்கிலாந்து கிரிக்கெட் வரலாற்றில் புதியதொரு மைல்கல்லை எட்டியிருந்தது.

சுமார் நான்கு தசாப்தங்களாக தென்னாபிரிக்க மண்ணில் டெஸ்ட் தொடரை கைப்பற்ற முடியாமல் இருந்தது இங்கிலாந்து அணி. மைக் ஹெற்றிங்கின் சிறந்த தலைமைத்துவம் கூட தென்னாபிரிக்காவுடன் தடுமாறியிருந்ததும் தவிர்க்க முடியாத உண்மையாகும். ஆனால் தற்போது அன்ட்ரு ஸ்ரோஸ், ஸ்ரீவ் ஹேர்மிசன் போன்ற புதிய இரத்தங்களின் இணைப்பால் மீண்டும் புத்துயிர்பெற்ற இங்கிலாந்து அணி, தென்னாபிரிக்காவில் டெஸ்ட் தொடரை வென்று, இருண்ட கண்டமான ஆபிரிக்காவிலும் தன்னை பிரகாசமாய் ஜொலிக்கச் செய்திருந்தது.

அதுபோலவே தென்னாபிரிக்க அணிக்கும் 1977ஆம் ஆண்டு காலப் பகுதிக்குப் பின்னர் கரீபியன் தீவுகளில் டெஸ்ட் தொடரை வெல்ல முடியாதது ஒரு பெருங் குறையாகவே இருந்தது. இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கென்றே சென்றதுபோல், சுமார் 2 மாதங்களுக்கு முன்னர் கரீபியன் தீவுகள் சென்றது கிரேம் ஸ்மித் தலைமையிலான தென்னாபிரிக்க அணி.

அண்மைக்காலமாக இறங்குமுகத்தைக் கண்டிருந்த தென்னாபிரிக்க அணியால் இந்தச் சாதனையை எட்ட முடியுமா என்ற சந்தேகம் ஆரம்பத்தில் இருந்தாலும், இறுதியில் 28 வருடங்களின் பின்னர் கரீபியன் மண்ணில் டெஸ்ட் தொடரை 2:0 என்று வென்று பெருமை தேடிக்கொண்டது.

இவ்வாறு சர்வதேச கிரிக்கெட் அரங்கில் முடியாதென்றிருந்த சில சாதனைகளை மகத்தான வெற்றிகள் மூலம் அரங்கேற்றியிருந்தன மேற்போன்ற அணிகள்.

இந்த வரிசையில் டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்பட்ட காலத்தில் இருந்து இன்று வரை மேற்கிந்தியத்தீவுகளில் டெஸ்ட் தொடரை வெல்லாமல் இருந்தது பாகிஸ்தான் அணி. சென்ற மாதம் மேற்கிந்தியத்தீவுகள் சென்ற இன்ஸமாம் தலைமையிலான பாகிஸ்தான் அணி இந்தத் தீர்ப்புக்களைத் திருத்தி எழுதும் என்றே பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது.

அண்மைக் காலமாக பெரும் பின்னடைவைச் சந்தித்து வரும் மேற்கிந்தியத் தீவுகளின் பலவீனத்தை, இந்தியாவில் ஒருநாள் தொடரைக் கைப்பற்றி பலம்பொருந்திய நிலையில் காணப்படும் பாகிஸ்தான் அணி பயன்படுத்துவது ஒன்றும் தற்போதைய நிலையில் சாத்தியப்படாத ஒரு விடயமுமல்ல. அதேபோன்றே முதன்முறையாக மேற்கிந்தியத்தீவுகளில் ஒருநாள் தொடரை வென்றுமிருந்தது.

ஆனாலும் இரண்டு டெஸ்ட் கொண்ட தொடரில் பார்படோஸில் நடைபெற்ற முதல் டெஸ்டில் துரதிஷ்டவசமாக இன்ஸமாம், யுகானா ஆகியோர் விளையாடாமல் போனதை தமக்குச் சாதகமாக்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி அபார வெற்றி பெற்றுக்கொண்டது. இதன் மூலம் தற்போது ஜமைக்காவில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்டில் பாகிஸ்தான் வென்றாலும், சொந்த மண்ணில் டெஸ்ட் தொடரை வெல்லும் பாகிஸ்தான் அணியினரின் 48 வருடக் கனவை ஈடேற்ற முடியாமல் செய்துவிட்டது மேற்கிந்தியத்தீவுகள் அணி.

-விமலன்

## சிட்டுக்குருவிக்கென்ன கட்டுப்பாடு

பிரெஞ் பகிரங்க ரெனிஸ் போட்டிகளில் இந்தமுறை மிகுந்த அதிர்ச்சியைத் தந்த நிகழ்ச்சி அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம் மூன்றாவது சுற்றில் வெளியேற்றப்பட்டதுதான். சிறப்பாக வெளியேறியவரை விட, வெளியேற்றியவரைப் பற்றிய செய்திகளே பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.

வீனஸ் வில்லியத்தைத் தோற்கடித்தவர் பல்கேரிய நாட்டைச் சேர்ந்த ஒரு சிறுமி. பெயர் செஸில் கரடன்சேவா. தனது பன்னிரண்டாவது வயதில் பல்கேரிய சோபியா நகரத்தில் இருந்து அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்துக்கு ரெனிஸ் பயிற்சிக்காகப் புலம்பெயர்ந்தவர். இவர் பிரெஞ் பகிரங்க ரெனிஸ் கிண்ணத்தை வென்றிருந்தால், இந்தச் சுற்றுப் போட்டியில் அதிகுறைந்த வயதில் கிண்ணம் வென்றவர் என்ற பெருமையைப் பெற்றிருப்பார். 1990 இல் அமெரிக்காவின் மொனிக்கா செலஸ் பிரெஞ் ஓபன் சம்பியன் பட்டம் வென்றபோது அவருக்கு பதினாறு வயதும் ஆறு மாதங்களும் மட்டுமே. துரதிஷ்டமாக காலிறுதிப் போட்டியில் ரஷ்யாவின் லிகொத்சேவாவிடம்செஸில் தோல்வியடைந்து விட்டாலும் கூட, சின்னஞ்சிறுசின் எதிர்காலம் வானமே எல்லை என்று சொல்லவைக்கிறது. வீனஸ் வில்லியத்தை 6-3, 1-6, 6-1 என்றவாறு செஸில் வென்றதன் பின் தன்நிலை உணர்ந்து பேசியிருக்கிறார். இந்த வெற்றியின் பின் நான் என்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளவே விரும்புகிறேன் என்கிறார். அத்தோடு உண்மையான அதிசிறந்த வீராங்கனையான வீனஸ் வில்லியத்தைத் தோற்கடித்தது எனக்கு ஒரு கனவு போலவே இருக்கிறது என்கிறார்.



செஸில் கரடன்சேவா
சிறகடித்துப் பற

ரெனிஸ் சகாப்தம் மார்டீனா நவ்ரடிலோவா அம்மையார், செக்கோஸ்லாவாக்கியா நாட்டில் பிறந்து அமெரிக்காவில் சென்று உலகப் பிரபல்யம் அடைந்தார். ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா ரஷ்யாவில் இருந்து அமெரிக்கா சென்றே உலகப் பிரபல்யம் பெற்றார். இப்பொழுது செஸில் அமெரிக்காவில் பயிற்சி பெற்றே பிரபல வீராங்கனையை வீழ்த்தி, பல்கேரியாவைப் பிரபல்யப்படுத்தித் தானும் பிரபல்யமாகிவிட்டார்.இதேவேளை இவர்கள் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அமெரிக்க மண்தான் இவர்களுக்குப் பெருமையைக் கொடுத்துள்ளது. வந்தாரை வாழவைக்கும் அமெரிக்கா.

–மக்டலின்

# ராஜாங்கம் பண்ணும் ராஜாக்கள்


பெனட் கிங்
உலகம் உங்கள் கையில்

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றும் நாடுகள் சார்ந்த அணிகளுக்குத் தற்போது பயிற்றுவிப்பாளர் தேர்வென்பது மிகவும் முக்கியத்துவம் பெறுவதாக மாறிவிட்டது. ஏனெனில் ஒவ்வொரு அணிகளின் வெற்றியின் பின்னாலும், பயிற்றுவிப்பாளரின் வெற்றி தங்கியுள்ளது என்று கூறினால் மிகையாகாது.

இந்த வகையில் அண்மைக்காலமாக ICC யால் அங்கீகாரம் பெற்ற பத்து டெஸ்ட் அந்தஸ்துள்ள கிரிக்கெட் நாடுகளும், பயிற்றுவிப்பாளர் தெரிவின்போது அவர் சார்ந்த நலன்களையும் கவனித்து, பெருமளவிலான ஊதியத் தொகையையும் கொடுப்பதனை நாம் காணலாம். இதற்குக் காரணம் தமது தேசிய அணிகள் வெற்றிப் பாதையில் செல்லவேண்டும் என்ற பேரவாவே ஆகும்.

தற்போது பயிற்சியாளர் தேர்வென்று எடுத்துக் கொண்டால், பெருமளவான நாடுகள் அவுஸ்ரேலியரை நியமிப்பதை ஒரு கௌரவ மாகக் கருதுகின்றன. குறிப்பாக டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பத்துநாடுகளில் ஐந்து, அவுஸ்ரேலியர்களையே தமது பயிற்சியாளராக நியமித்துள்ளன.

அவுஸ்ரேலியாவில் ஜோன்புச்சானன், மேற்கிந்தியத் தீவுகளில் பெனட் கிங், பங்களாதேஷில் டேவ் வட்மோர், தற்போது இந்தியாவில் கிரேக் சப்பல், இலங்கையில் ரொம் மூடி ஆகியோர் உள்ளமையைக் குறிப்பிடலாம்.

அவுஸ்ரேலியர்களை பயிற்சியாளராக நியமிப்பது குறித்து 1999 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை அவுஸ்ரேலிய அணி கைப்பற்றக் காரணமாக இருந்தவரும், பின்னர் சிம்பாப்வே அணியின் பயிற்சியாளராக இருந்து விலகியவருமான ஜெவ் மார்ஷ் என்ன கூறுகிறார்.

அவுஸ்ரேலிய கலாசாரத்தில் விளையாட்டு என்பது ஒன்றிப்போன விடயம். இங்குள்ளவர்கள் ஒரு விளையாட்டு முடிவடைந்ததும் அதைப்பற்றி ஒன்றுகூடிக் கதைப்பார்கள். எதிராளிகளின் விமர்சனங்களை செவிமடுத்து தமது பிழைகளை திருத்திக்கொள்வார்கள். இதுவே அவுஸ்ரேலிய அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைகின்றது. அத்துடன் இந்த அணியிலுள்ள வீரர்கள், பின்னாளில் பயிற்சியாளராக செல்கின்றார்கள். அவ்வாறு செல்லும் அவர்கள்- தமது பொறுப்பைச் சவாலாக எடுத்து தாம் சார்ந்த அணியை வெற்றிப்பாதைக்கும் இட்டுச்செல்ல வைக்கிறார்கள்.


ஜெவ் மார்ஷ்
சரியாகச் சொன்னீர்கள்

எனவே, அவுஸ்ரேலியர்கள் இந்தத் திட்டத்தைக் கைக்கொள்வதனால் அவர்களது வெற்றிப் பயணமும் தொடர்ந்து செல்வதுடன், பல நாடுகள் அவுஸ்ரேலியர்களை தமது பயிற்சியாளராக நியமிக்கவும் காரணமாகின்றது என்கிறார்.

உண்மைதான் 1980 ஆம் ஆண்டு பொப் சிம்சனை தலைவராகக் கொண்டு விளையாடிய அவுஸ்ரேலிய அணி- அன்றைய காலத்தில் எளிதில் வெல்லப்படக்கூடிய அணியாக இருந்தது. ஆனால் இன்று நிலைமை வேறு. அவுஸ்ரேலியா மற்றைய அணிகளை எளிதில் வெல்லக்கூடிய அணியாக மாறியுள்ளதுடன், ஒரு காலத்தில் உலகிற்கு கிரிக்கெட் என்றால் என்ன என்று இலக்கணம் வகுத்துக் கொடுத்த மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கூட பயிற்சியாளராக் வருமளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

இந்த வகையில், ஏற்கனவே பயிற்சியாளராக உள்ள பெனட் கிங் உடைய மேற்கிந்தியத் தீவுகள் அணியும், தற்போது அவுஸ்ரேலியர்களைப் புதிதாகப் பயிற்சியாளர்களைக் கொண்டுள்ள இந்தியா மற்றும் இலங்கை அணிகளும், வரும் ஓகஸ்ட் மாதம் கொழும்பில் முக்கோணத் தொடரில் மோதப்போகின்றன. இதில் எமக்கு வெளியில் இந்தியா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதும் போட்டி எனத் தெரிந்தாலும், உண்மையிலேயே இது அவுஸ்ரேலியர்களுக்கிடையேயான போட்டியே யாகும். எனவே இரண்டு மாதம் பொறுத்திருந்தால் தெரியும் எந்த அவுஸ்ரேலியர் வெல்கின்றார் என்பது.

—யசோ

# உள்ளதைச் சொல்கிறோம்


மார்க்கஸ் ட்ரெஸ்கொதிக்
சித்திரவதை செய்தவர்

இதுவரை படுமோசமான இனிங்ஸ் தோல்விகள் என பத்து ஆட்டங்கள் குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் மூன்று ஆட்டங்கள் பங்களாதேஷ் பெற்ற தோல்விகளுள் அடங்குகின்றன.

இங்கிலாந்து பங்களாதேஷை ஒரு இனிங்ஸ் மற்றும் 261 ஓட்டங்களால் கடந்த வாரம் தோல்வியுற வைத்தமை இந்த மூன்றில் ஒன்று. அதுவும் மூன்றாம் நாள் மதிய இடைவேளைக்கு முன்பே ஆட்டம் முடிவுக்கு அதிர்ச்சியிலும் அதிர்ச்சி.

இன்னொருபுறம் மூன்றே மூன்று விக்கெட்டுக்களை மட்டும் இழந்து இங்கிலாந்து 528 ஓட்டங்களைக் குவித்தது இன்னொரு அதிர்ச்சி. இந்தக் குவியலில் மார்க்கஸ் ட்ரெஸ் கொதிக் ஒதுக்கிய 194 ஐக் கூட பங்களாதேஷ் அணியால் ஒரு இனிங்ஸிலாவது பெற்றுக்கொள்ள முடியாமற் போனது எந்த வகையில் நோக்குவது. முதலாவது இனிங்ஸ் 108, இரண்டாவது இனிங்ஸ் 159.

இனி பங்களாதேஷ் சர்வதேச கிரிக்கெட் அணியின் நிலை என்ன? சர்வதேச டெஸ்ட் அந்தஸ்தில் இருந்து பங்களாதேஷ் அணியை கீழ் இறக்குவதில்லை என்பதில் ICC உறுதியாக இருப்பதாகக் கூறப்படுகின்றது. இப்பொழுது அதுவல்ல பிரச்சினை. பங்களாதேஷ் என்றைக்கு வயது வந்த அணியாக மாறப்போகிறது. இதுவரை விளையாடிய முப்பத்தேழு டெஸ்ட்டுக்களில் ஒரேயொரு வெற்றியை மட்டுமே கண்டிருந்தது.

இதைப் பற்றிப் பேசும்போது, பங்களாதேஷ் அணி சில கிரிக்கெட் விளையாடும் நாடுகளின் 'A' அணியின் தகுதியில் கூட இல்லை என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நிலையில் சிம்பாப்வே, கென்யா, பங்களாதேஷ் போன்றவை தமக்குள் தொடர்களை தற்காலிகமாவது ஏற்படுத்திக் கொள்ளலாம் அல்லவா. ஒரு விமர்சகர் கூறுவதுபோல் பங்களாதேஷ் அணி முன்னணி ASSOCIATE MEMBER நாடுகளுடன் மற்றும் NON TEST NATIONS உடன் அதிகளவான கிரிக்கெட் ஆட்டங்களை மேற் கொள்ளலாம் அல்லவா.

ஆனால் பங்களாதேஷ் பயிற்றுனர் டேவ் வட்மோர் பங்களாதேஷ் அணியை விட்டுக் கொடுக்க மறுக்கிறார். ஆனால் எவ்வளவு காலம் இப்படி பாதுகாப்பது. யதார்த்தத்தை சரியாகப் புரியாமல் மீசையில் மண்படவில்லை என்றவாறு இவர் பேசுவதாகவே தென்படுகின்றது. சரியான திசையில் சென்று பங்களாதேஷ் தனது இலக்கையடையவேண்டுமாயின், முன்னர் வென்ற இரண்டொரு ஆட்டங்களைப் பற்றி "FLASH BACK" ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்காமல் தம்மை வளர்த்துக் கொள்ள வேறு என்ன செய்யலாம் என்று எல்லாத் தரப்பினரும் சிந்திப்பதே சரியாக இருக்கும்.

இன்னொருபுறம் பலவீனமான நாடுகளை மிகப்பலமான நாடுகள் பந்துகளாலும், துடுப்புகளாலும் நொருக்க, பெறுமதியற்ற சாதனைப் பட்டியல்களின் எண்ணிக்கையும் கூடிக் கொண்டே போவது போலத் தெரிகின்றது. இந்த நிலையானது சாதனைகளின் கனதியை, பெறுமதியை கேள்விக் குறியாக்குவதுடன் சிலவேளைகளில் இன்னாருடன் விளையாடினாற்தான் சாதனை 'A' பட்டியல், இன்னாருடன் விளையாடினால் 'B' பட்டியல் என்ற புதுவித வரையறைகளும் உருவாக இடம் கொடுத்ததாக முடியும்.


டேவ் வட்மோர்
கண் திறந்து பாருங்கள்

எனவே மீண்டும் பங்களா தேஷ் பக்கம் வந்தால், இவர்கள் பொறுத்து வட் மோர், ICC, ஆசிய கிரிக்கெட் சங்கம் எல்லோரும் ஒன்று சேர்ந்து சரியான திட்டமிடல்களை மேற்கொள்ள வேண்டும். அப்படி இல்லாது விட்டால் உயர்வான டெஸ்ட் போட்டிகள் பொறுத்து முரண் வரையறைகள், வரைவிலக்கணங்கள் உருவாவதைத் தடுக்க இயலாமற் போகும்.

—நிர்மலன்

# வெள்ளி திசை


அன்ட்ரு ஸ்ரோஸ்
சாம்பலில் எழவேண்டும்

அன்ட்ரு ஸ்ரோஸ் சர்வதேச கிரிக்கெட் உலகில் காலடி வைத்து ஒருவருடம் தான் ஆகிறது. இருபத்தெட்டு வயதான இங்கிலாந்தின் இடதுகை ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான இவர் - 2004 இன் 'வொடபோன்' விருதுபெறும் முதன்மை ஆட்டக்காரராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரது பிறந்த நாடு தென்னாபிரிக்கா. இப்போது இங்கிலாந்துப் பிரஜை. இங்கிலாந்தின் மிடிலெசெக்ஸ் பிராந்திய ஆட்டக்காரர். கடந்த வருடம் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமான இவர் ஐந்து சதங்கள் போட்டு அசத்தியவர்.

சிறப்பாக தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்த போது மூன்று சதங்கள் உட்பட 656 ஓட்டங்களைப் பெற்றவர். ஆட்டத் தொடர் நாயகன் விருதையும் தட்டிக்கொண்டவர் இவர். இன்னொரு சிறப்பு இவருடன் இணைந்து கொள்கிறது. இவர் இங்கிலாந்தின் அணியில் இணைந்து விளையாடிய முதல் எட்டு டெஸ்ட் போட்டிகளிலும் இங்கிலாந்து வெற்றி பெற்றது. இங்கிலாந்தைப் பொறுத்தும், ஸ்ரோஸ் பொறுத்தும் இதுவும் ஒரு சாதனைதான். ஆனால் ஸ்ரோஸ் அடக்கமாகப் பேசுகிறார். பலம் வாய்ந்த அணியொன்றின் அங்கத்தவனாக இருக்கும் போது, விளையாடுவது சுலபமே என்று தன் திறமையை இங்கிலாந்தின் திறமையாகக் காட்ட முயல்கிறார். அதோடு தனது சர்வதேச கிரிக்கெட் ஆட்டத்தின் ஆரம்பம் இந்தளவு பிரகாசமாக இருக்கும் என்று தான் எண்ணியிருக்கவில்லை என்றும் கூறுகிறார். இப்பொழுது இவருக்குத் தனது திறமையைக் காட்ட இன்னொரு சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. தற்போது பங்களாதேஷ் அணி இங்கிலாந்தில் நிற்கிறது. ஸ்ரோஸ் துடுப்பெடுத்தாட அவரை எதிர்த்து பங்களாதேஷ் வீரர்கள் எப்படிப் பந்துவீசப் போகிறார்கள் என்பது ஒரு சுவையான விடயமாகவே இருக்கப் போகிறது.

—அன்ரனி

விளையாட்டு அரங்கம்

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

# புதுக்குடியிருப்பு - முள்ளியவளையில் மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள்!

முல்லைத்தீவு

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

கடந்த வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு புதுக்குடியிருப்பு மருத்துவமனை முன்பாக ஒன்று கூடிய மாணவர்கள், புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய மாணவிகளின் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் முன்னே செல்ல, அதனைத் தொடர்ந்து மாணவர் கள் பேரணியாக தியாகி பொன். சிவகுமாரனினதும், மேஜர் முரளியினதும் திருவுருவப்படங்களைத் தாங்கியவாறு நகர்ந்து, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சென்றடைந்தனர்.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவர் நிகால்டின் தலைமையில் நடைபெற்ற அரங்க நிகழ்வில் - பொதுச் சுடரை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் வி.கே.சிவலிங்கம் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் செல்வன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தியாகி பொன்.சிவகுமாரனின் திருவுருவப் படத்துக்கு - புதுக்குடியிருப்பு இரணைப்பாலை மகா வித்தியாலய அதிபர் இருதயநாதன் ஈகச்சுடரேற்றி, மலர்மாலை அணிவித்தார்.

மேஜர் முரளியின் திருவுருவப் படத்துக்கு புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலய அதிபர் அன்ரனி குலதாஸ் ஈகச்சுடர் ஏற்றி, மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைகளை புதுக்குடியிருப்பு பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன், புதுக்குடியிருப்பு சிறி முருகானந்தா வித்தியாலய முதல்வர் செல்வநாயகம், இரணைப்பாலை மகா வித்தியாலய முதல்வர் இருதயநாதன் ஆகியோர் வழங்கினர்.

இதில் மாணவர் எழுச்சிநாள் தொடர்பாக விடுவிக்கப்பட்ட அறிக்கையைப் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவி சுரேந்தினி வாசித்தார்.

இந்தப் பேரணியின்போது அலங்கரிக்கப்பட்ட ஊர்திப் பவனியும் இடம்பெற்றது. இதே வேளை முள்ளியவளை பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு- முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது.

கடந்த வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு முள்ளியவளை பிரதேச செயலகம் முன்பாக ஒன்றுகூடிய மாணவர்கள் பேரணியாக நகர்ந்து, வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தை அடைந்தனர். அங்கு அமைக்கப்பட்ட மேடையில் நடைபெற்ற நிகழ்வில், பொதுச்சுடரை நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக்கொடியை ஒட்டுசுட்டான் பிரதேசப் பொறுப்பாளர்முல்லைவீரன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தியாகி பொன்.சிவகுமாரனதும், மேஜர் முரளியினதும் திருவுருவப் படங்களுக்கு முல்லைத்தீவு கரைதுறைப்பற்று கோட்டக் கல்வி அதிகாரி பொதுச்சுடர் ஏற்றிவைத்தார்.

கருத்துரைகளை கனகரத்தினம், கோட்டக்கல்வி அதிகாரி மற்றும் முல்லைத்தீவு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொருளாளர் கேதீஸ்வரன், முல்லைத்தீவு மகா வித்தியாலய ஆசிரியர் ஜெகதாஸ், முல்லைத்தீவு தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் ஈழவன் ஆகியோர் நிகழ்த்தினர்.



முன்னாள் கிளிநொச்சி மாவட்ட கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினத்துக்கு அண்மையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் விருந்துபசார இடம் பெற்றபோது அவர் அழைத்து வரப்படுவதையும். அருகில் தற்போதைய கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர். கல்விக்கழகப் பொறுப்பாளர் பெ.இளங்குமரன் மற்றும் பிரமுகர்களையும் படத்தில் காணலாம். படம்: வே.சீலன்.

## மன்னார் அபிவிருத்திக்கு நிதியுதவி

மன்னார்

மன்னார் மாவட்டத்தின் 2005ஆம் ஆண்டின் அபிவிருத்திக்கென நியாப் திட்டத்துக்கு 260 மில்லியன் ரூபாவை உலக வங்கி வழங்கியுள்ளது.

இந்த நிலையில் இதுவரை 36 மில்லியன் ரூபா செலவிடப்பட் டுள்ளது.

குளங்கள், நீர்ப்பாசன வாய்க்கால்கள், விவசாயிகளின் அடிப்படைத் தேவைகள் என்பவற்றுக்கே இந்த நிதி செலவிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## மாவீரர் பெற்றோர் சிறப்பிப்பு நிகழ்வு

கிளிநொச்சி

அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் மாவீரர் பெற்றோர் சிறப்பிப்பு நிகழ்வும், சங்கம நிகழ்வும் இன்று அக்கராயன் -கோணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களின் கருத்துரைகளும், 'மண்ணின் மைந்தர்கள் வீர முரசு கலை நிகழ்வும்' கலை பண்பாட்டுக்கழக மகளிர் பிரிவினரின் சங்கநாதம் நிகழ்வும் நடைபெறவுள்ளன.

## சமாதானத்துக்கான நிகழ்ச்சித்திட்டம்

கிளிநொச்சி

சமாதானமும் அபிவிருத்திக்குமான நிகழ்ச்சித்திட்டத்தின் 4 ஆம் கட்ட நிகழ்வு - கடந்த செவ்வாய்க்கிழமை காலை10 மணிக்கு வீரபுரம் முன்பள்ளி யில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ், முஸ்லிம், சிங்கள மூவினச் சிறுவர்களும் ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்புகள் என மூவின மக்களும் கலந்துகொண்டனர்.

சிறார்களின் விளையாட்டுக்கள், கலாசார நிகழ்வுகள், ஆடல் - பாடல் நிகழ்வுகள் யாவும் சமாதான அபிவிருத்தியைக் கருப்பொருளாகக் கொண்டதாக அமைந்திருந்தது.

CHA நிறுவனத்தின் நிதிப்படுத்தலின் கீழ் - வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்த நிகழ்வில் மதகுருமார்கள், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர், கலாசார உத்தியோகத்தர், செட்டிக்குள பிரதேச கட்டமைப்பு உறுப்பினர்கள், ஏனைய பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்து சிறப்பித்தனர்.

## மன்னார் வைத்தியசாலையில் பெரும் ஆளணிப் பற்றாக்குறை

மன்னார்

மன்னார் பொது வைத்தியசாலையில் தொடர்ந்து ஆளணிப் பற்றாக்குறை நிலவி வருவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நியமனம் செய்யப்பட்ட பெண் தாதி உத்தியோகத்தர்கள் ஒரு வாரத்துக்குப் பின்னர் சுகாதாரத் திணைக்களத்தினால் திருப்பியழைக்கப் பட்டனர்.

இங்கு பணி புரியும் சிங்கள வைத்தியர்கள் தமது முதல் நியமனத்துக்காகவே மன்னார் பொது வைத்தியசாலையில் வந்து தமது பதவியை உறுதி செய்துவிட்டு, பின்னர் வேறு இடத்துக்குச் சென்று, அடுத்த மாதத்தில் சுகாதார அமைச்சில் இருந்து இடமாற்றக் கடிதத்துடன் வருவதால், இந்த வைத்தியசாலையில் நோயாளர்களுக்குச் சிறந்த வைத்தியம் செய்ய முடியாதிருப்பதாக மாவட்ட பொது வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## மாணவர் விடுதி அமைப்பதற்கு முள்ளியவளையில் அடிக்கல்

முல்லைத்தீவு

சுனாமியால் பாதிக்கப்பட்ட 250 சிறுவர்களுக்கான புதிய மாணவர் விடுதி ஒன்றை அமைப்பதில், தமிழர் புனர்வாழ்வுக்கழகச் சிறுவர் நலன் திட்டப் பிரிவு ஈடுபட்டுள்ளது.

ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதிப்பங்களிப்புடன் நிறுவப்படவுள்ள இந்த மாணவர் விடுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு வைபவரீதியாக கடந்த வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் முல்லைத்தீவிலுள்ள முள்ளியவளை என்னும்இடத்தில்நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சிறுவர்நலன்திட்டப்பிரிவின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் இ.ரவி தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் - ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சண்முகரட்ணம் அடிக்கல் நாட்டிவைத்தார்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**ஜீன் - 05**

1783 - வெப்பமான காற்று நிறைந்த பலூனின் மூலம் பறக்முடியுமென்பதை பிரான்ஸைச் சேர்ந்த மங்கோல்ஃபியர் சகோதரர்கள் மெய்ப்பித்துக் காட்டினார்கள்.

1865 - விலை உயர்ந்த பொருட்களை வைத்துப் பாது காக்கும் காப்புப் பெட்டக வசதி அளிக்கும் நிறுவனங்கள் நியூயோர்க்கில் ஆரம்பிக்கப்பட்டன.

1900 - பிரிட்டிஷ் படைகள் தென்னாபிரிக்காவில் போயர் தலைநகர் பிரிட்டோரியாவைக் கைப்பற்றின.

1912 - கறுப்பு இனத்தவர்களது கிளர்ச்சியிலிருந்து கியூபாவிலுள்ள அமெரிக்கர்களையும், அவர்களின் உடமைகளையும் பாதுகாக்க அமெரிக்கப்படை தரையிறங்குகிறது.

1917 - இராணுவத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இருபத்தியொரு வயதுடையவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

1919 - யூகோஸ்லேவியா - ஒஸ்ரியா போர் நிறுத்தம் ஏற்பட்டது.

❊ பிரிட்டனில் இராணுவத்தில் ஆட்குறைப்புத் தொடங்கியது. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட அதிகாரிகள் உட்பட இருபத்தியெட்டு லட்சம் பேர் வரை இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

1926 - ஈராக்கின் வட எல்லை நகரான மோசுல் தொடர்பாக துருக்கிக்கும், ஈராக்குக்கும் நீண்ட காலமாக இருந்த வந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது. இது தொடர்பாக பிரிட்டன், துருக்கி, ஈராக் நாடுகளுக்கிடையே முத்தரப்பு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

1936 - வங்கிகளை நாட்டுடமையாக்கல், வாரத்துக்கு 40 மணித்தியால வேலை - தொழிலாளர் பிரச்சினைகளை நடுவர் நீதிமன்றத்துக்கு விடுதல் போன்றவாறான பல சீர்திருத்தங்களை பிரான்ஸில் கொண்டு வந்த பிரதமர் 'லியான் ப்ளம்' தலைமையிலான பொப்புலர் முன்னணி கட்சி ஆட்சியமைத்தது.

1945 - ஜேர்மனி நாட்டைத் தங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்ததைத் தொடர்ந்து, நேச நாடுகள் கட்டுப்பாட்டுக் குழுவின் கூட்டம் பெர்லினில் நடைபெற்றது.

1947 - இரண்டாம் உலகப் போரால் சீரழிந்து போயிருந்து ஐரோப்பிய நாடுகளைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கான 'மார்ஷல் திட்டம்' என அழைக்கப்பட்ட ஐரோப்பிய மீட்புப் பணித் திட்டத்தை அமெரிக்க உள்நாட்டு அமைச்சரான ஜோர்ஜ் மர்ர்சல் வெளியிட்டார்.

1955 - வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பான 'நேட்டோ' அமைப்புக்கு நிகராக கம்யூனிஸ்ட் நாடுகள் மொஸ்கோவைத் தலைமையகமாகக் கொண்டு 'வோர்சோ ஒப்பந்தம்' என்பதை ஏற்படுத்தினார்.

1956 - பண்டாரநாயக்கா ஆட்சிக் காலத்தில் சிங்களம் மட்டும் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

1959 - சுதந்திர சிங்கப்பூரின் முதல் பிரதம மந்திரியாக லீ குவான் யூ பதவி ஏற்றார்.

1967 - வரலாற்றிலேயே குறுகிய காலத்தில் அதாவது -ஆறு நாட்களிலேயே நடந்து முடிந்த இஸ்ரேல் - அரபு போர் ஆரம்பமாகியது. சிரியா, ஈராக் ஆகிய நாடுகளின் 25 விமான தளங்களில் 450 போர் விமானங்களும் அழிக்கப்பட்டன. 20 ஆயிரம் அரபுப் படையினர் இறந்தனர். சுயெஸ்கால்வாய், கோலன் குன்று, மேற்குக்கரை, பழைய ஜெருசேலம் ஆகிய எல்லைகள்வரை காலூன்றிய இஸ்ரேல் 26 விமானங்களையும், 700 படையினரையும் மட்டுமே இழந்தது.

1973 - மனிதரை வைத்து மனிதரால் இழுத்துச் செல்லப்படும் கைரிக்ஷா முறை தமிழ் நாட்டில் சட்டபூர்வமாக நிறுத்தப்பட்டது.

1974 - பொலிஸாரிடம் கைதாகக்கூடாது என்ற எண்ணத்தில் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் தியாகி சிவகுமாரன் சயனைட் அருந்தித் தியாகமரணமடைந்தார்.

1975 - 1967 ஆம் ஆண்டில் இதே தினத்தில் ஆரம்பமாகிய அரபு - இஸ்ரேல் ஆறுநாள் போர் காரணமாக மூடப்பட்ட சுயெஸ் கால்வாய், இஸ்ரேல் நாட்டுக் கப்பல்கள் தவிர, பிறநாட்டுக் கப்பல்கள் செல்வதற்காக எட்டு ஆண்டுகளின் பின் திறக்கப்பட்டது.

1988 - 1987ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரிலிருந்து, 11 மீற்றர் நீளமுள்ள படகில் தனியாக உலகைச் சுற்றிவரப் புறப்பட்ட கே கோட்டி என்ற 34 வயதுடைய பெண்மணி, வேறெந்தப்படகினுடனோ அல்லது நபர்களுடனோ எந்தவிதமான தொடர்புகளையும் கொள்ளாது 187 நாட்கள் பயணத்தை மேற்கொண்டபின், மீள சிட்னி நகரைச் சென்றடைந்தார்.

✪ ரஷ்யாவில் கிறிஸ்தவ மதம் தோன்றிய ஆயிரமாவது ஆண்டுவிழா மொஸ்கோவில் எபிபானி தேவாலயத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

1993 - வரலாற்றில் இடம்பெற்றுவிட்ட "ஒருநாள் அரசு" கலைப்பு நிகழ்வு நடந்தது. கம்போடியாவில் இளவரசர் நோரோடோம் சிகானுக் தலைமையில் அமைக்கப்பட்ட இடைக்காலக் கூட்டணி அரசைக் கலைத்துவிட்டதாக மன்னர் அறிவித்தார்.

1994 - "லஜ்ஜா" எனும் சர்ச்சைக்குரிய நூலை எழுதிய வங்கப் பெண் எழுத்தாளர் தஸ்லீமா நஸ்ரீன், பங்களாதேஷில் ஏற்பட்ட கடும் எதிர்ப்புக்காரணமாக தலைமறைவானார்.

✪ இந்தியா பிரித்வி ஏவுகணையின் செயற்திறனை வெற்றிகரமாகப் பரீட்சித்துப் பார்த்தது.

2002 - தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு.சிவசிதம்பரம் காலமானார்.

✪ சர்வதேச சுற்றுச் சூழல் தினம்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சலம்பற்றிச் சால்புஇல செய்யார்மாசு அற்ற*
*குலம்பற்றி வாழ்தும்என் பார்*

திருக்குறள்

# நமது நோக்கு

## பெருகிவருகின்ற இரைச்சல் கலாசாரமும் அதனால் ஏற்பட்டுவரும் விளைவுகளும்!

அண்மையில் குளிர்களி அதாவது - ஐஸ்கிறீம் விற்கும் வாகனங்களில் பாரிய ஒலிபரப்புச் சாதனங்கள் மூலம் பாடல்களை ஒலிபரப்பியபடி வீதிகளில் செல்வதை தடை செய்வது குறித்த செய்திகள் பத்திரிகைகளில் வெளியாகி இருந்தன.

அது சமூகப் பொறுப்புடன் சிந்திப்பவர்களால் பெரிதும் வரவேற்கப்பட்ட ஒன்றாகவும் இருந்தது. ஆனால், அது எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமாகும் என்ற கேள்வியும் எழவே செய்தது. எல்லாமே வர்த்தக மயமாகிவிட்ட சமூகத்தில், எதையும் பணம் என்ற மந்திரப் பொருளால் சாதித்துவிடக்கூடிய லஞ்சமும், ஊழலும் கொடிகட்டி அரசு நடத்தும் சூழலில், வர்த்தக வல்லுனர்கள் தமது வருமானத்தைப் பாதிக்கும் எந்தத் திட்டத்தையும் அமுல்செய்ய விரும்பமாட்டார்கள் என்பதும் தெரிந்த விடயமேயாகும்.

இன்று குடாநாட்டின் சுற்றுச்சூழல் எல்லாவகையிலும் மாசடையத் தொடங்கியுள்ளதை வெளிப்படையாக காணவும், உணரவும் கூடியதாகவே உள்ளது.

இதற்கு சமூக அக்கறையுடன் சிந்திக்கும் அறிவார்ந்த மக்கள் அருகிவருவதும் முக்கிய காரணம் என்பதுடன், அரச நிர்வாகக் கட்டமைப்புகள் பலவும் பொறுப்பற்ற விதத்தில் ஏனோ தானோவென்று பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொள்ளாது இயங்குவதும் மற்றொரு பிரதான காரணமாகும்.

யாழ்ப்பாண குடாநாட்டு சூழல் இன்று காதுகளை அடைத்து மனதுக்கு எரிச்சலையும், அமைதியின்மையையும் ஏற்படுத்தும் இரைச்சல் கலாசாரத்தின் ஆக்கிரமிப்புக்குள்ளாகிவிட்டது.

- பெருமளவிலான சன நடமாட்டத்தின் இரைச்சல்.
- பெருந்தொகையிலான கட்டுப்படுத்தவே முடியாத பல்வேறு வாகன போக்குவரத்தின் இரைச்சல்.
- வர்த்தக விளம்பர - வாகனங்கள் இசையென்ற பெயரில் எழுப்பும் எரிச்சலூட்டும் இரைச்சல்.
- பொதுக் கூட்டங்கள், பல்வேறுபட்ட விழாக்கள், கோவில் திருவிழாக்கள், ஏனைய நிகழ்வுகள் எல்லாவற்றிலும் வானுயர எழுந்து தலைநீட்டி நிற்கும் ஒலிபெருக்கிகள் எழுப்பும் பேரிரைச்சல்.
- வீடுகளிலும், தனியார் நிறுவனங்களிலும், எழும் வானொலி மற்றும் ஏனைய இசைக்கருவிகளின் கட்டுப்பாடற்ற இரைச்சல் என எங்கும் காதடைக்கும் நாரச ஒலியின் சாம்பார்ச் சங்கமமானது - அமைதியுடன் இயல்பு வாழ்வை வாழும் உரிமையுடைய சராசரி சாதாரண மனிதருக்கு பெரும் சவாலாகவும், இடையறாத உளரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்துவதாகவும் அமைந்து தீவிரம் கொண்டுநிற்பது கவலைக்கும், கண்டிப்புக்கும் உரிய விடயமேயாகும்.

அதீத ஒலி - அதிக இரைச்சல் என்பனவற்றால் ஏற்படக் கூடிய உடலியல் - உளவியல் பாதிப்புகள் குறித்து மருத்து வர்கள் பெருமளவில் அறிவுறுத்திவருகின்ற போதிலும் - எவரும் அதில் அக்கறை செலுத்துவதாக இல்லை.

அதிக சப்தமும், இரைச்சலும் நிறைந்த சூழலில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுவிட்ட மனிதரின் கேட்கும் திறன் பாதிப்படைகிறது. ரசனை உணர்வு சிதைகிறது. இதனால் அவர்களின் இயல்பு நிலை தழும்பலுக்குள்ளாகி மன அமைதி இழந்தவர்களாகும் ஆபத்தும் ஏற்படுகிறது.

நோயாளர்கள், முதியவர்கள் போன்றோரின் ஓய்வு நிலையைப் பாதிக்கிறது. நோயின் தீவிரத்தை அதிகமாக்குகிறது.

பாடசாலை மாணவர்களின் மன ஒருமைப்பாட்டைச் சிதைத்து திசை திருப்புகிறது. தொழில் செய்வோரின் கவனத்தை மாற்றி குழப்பத்தை உண்டுபண்ணுகிறது. அதுவும் சில சமயங்களில் ஒரேநேரத்தில் ஒரே இடத்தைச் சுற்றியுள்ள பல ஆலயங்கள் மற்றும் பொது இடங்களில் திருவிழாக்கள், நிகழ்ச்சிகள் நடைபெறும். பல ஒலிபெருக்கிகள் ஓரே சமயத்தில் அலற ஆரம்பக்கும்போது ஏற்படும் தொல்லைகளை வார்த்தைகளுள் அடக்குதல் கடினமாகும்.

இத்தகைய பொது நிகழ்வுகள், ஆலய உற்சவகாலங்களில் கட்டுப்பாடற்றும், காலவரையறையற்றும் ஒலிபெருக்கிகளைப் பாவிக்க அனுமதியளிப்பதானது- அதிகசத்தத்தால் சூழல் மாசடையவும், பொதுமக்கள் பாதிப்படையவும் வழிவகுப்பதாகிவிடும்.

இரவில் விடிய விடிய நிகழ்வுகள், விழாக்கள் நடத்துவோர் சூழ உள்ளவர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களைப் பற்றி அக்கறை கொள்ளாத ஜென்மங்களாகவே இருப்பர்.

ஒலிபெருக்கி உரிமையாளர்களும், அவற்றைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குவோரும் இது விடயத்தில் அக்கறை எடுக்கவேண்டியது அவசியமாகும்.


பொதுமக்களைப் பாதுகாத்து, அவர்களின் செவிப்புலனைப் பாதிக்காத வகையில், அவர்களின் இயல்பு வாழ்க்கைக்கு பங்கம் விளைவிக்காத விதத்திலும் ஒலிபெருக்கியின் ஓசையின் 'டெசிபல்' அளவு வீதத்தைக் கட்டுப்படுத்திவைக்க சட்டரீதியான அறிவுறுத்தலைச் சம்பந்தப்பட்டவர்கள் விடுக்கவேண்டியதும் காலத்தின் தேவையேயாகும்.

வெளிநாடுகளில் நாகரிகம் மிக்க சமூகவாழ்க்கையை வாழும் மக்கள் தமது சொந்த வானொலியின் ஓசை அடுத்தவீட்டார் காதில் விழ அனுமதிக்கமாட்டார்கள். அப்படிப் பெரும் சத்தமிடும் வகையில் வானொலியைப் பயன்படுத்துவது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமுமாகும்.

இந்தப் பண்பாட்டை மனித உணர்வுமிக்க அனைவரும் கடைப்பிடித்தல் அவசியமாகும்.

யாழ்.குடாவில் பெருகிவரும் இரைச்சல் கலாசாரத்தைத் தடுப்பதன் காரணமாக - சூழல் மாசடைவது தடுக்கப்படுவதுடன், மனிதனுக்கு இரைச்சல் காரணமாக ஏற்படும் அழுத்தம் மற்றும் ஏனைய கோளாறுகளையும் தவிர்க்கமுடியும். இறுதியாக ஒரு எச்சரிக்கை 80 - 85 டெசிபல் அளவுள்ள சத்தத்தை ஒருவர தினம் 8 மணிநேரம் வீதம் 3 நாட்களுக்குக் கேட்பாரேயானால், அவரது கேட்கும் திறன் பாதிப்புக்குள்ளாகிவிடும் என மருத்துவ நிபுணர்கள் கூறுவதை அசட்டை செய்யாதீர்கள். அதனால் பாதிப்படையப்போவது நீங்களே...

# நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# இந்தியத் தலையீட்டை எதிர்த்த பாண்டுங் வீரனும், சந்திரிகாவும்!

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாடுகள் மனமிரங்கி அளித்த உதவிகளைப் பங்கிட்டுக் கொடுப்பதற்கு இந்தியா சம்மதம் தெரிவித்துவிட்டதாம். சந்திரிகா அம்மையாரின் இந்தியப் பயணம் வெற்றியாம் என்று சொல்லிக் கொண்டு வந்தார் நண்பர் பரமசிவம்.

வெளிநாடுகள் கொடுத்த உதவியைப் பங்கிட்டுக் கொடுப்பதற்கு இந்தியா எதற்குச் சம்மதம் தெரிவிக்க வேண்டும் என்றேன்.

தமிழர் தாயகமான வடக்குகிழக்கில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாடுகள் கொடுத்த உதவியைப் பங்கிட்டுக் கொடுப்பதற்கு விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் சேர்ந்த பொதுக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்று அரசுதான் சொன்னது. இதை அமைப்பதற்கான பேச்சு வார்த்தைகளும் நடைபெற்றன. பொதுக்கட்டமைப்பில் விடுதலைப் புலிகளைச் சேர்த்தால் அவர்களுக்குச் சர்வதேச அந்தஸ்து கிடைத்துவிடுமென்றும், இதை வைத்தே நாட்டைத் துண்டாடி புலிகள் தங்கள் தமிழீழத்தை அமைத்து விடுவார்களென்றும் ஜே.வி.பியும், புத்தபிக்குகளின் ஹெல உறுமய அரசியல் கட்சியும், இனவெறி சிங்கள ஆங்கில ஊடகங்களும் எதிர்ப்புத் தெரிவித்தன. பொதுக்கட்டமைப்பு வந்தால் அரசிலிருந்து வெளியேறுவோமென ஜே.வி.பியும் சாகும் வரை உண்ணாவிரதம் என்று பிக்குகளும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் பொதுக்கட்டமைப்பு இலங்கை இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வுகாண வழிவகுக்குமெனத் தெரிவித்தன. அமெரிக்காவும் இதற்கு ஆதரவு தெரிவித்தது. ஆனால் இந்தியா மட்டும் பொதுக்கட்டமைப்பு பற்றி எதுவித கருத்தும் தெரிவிக்காமல் மௌனம் சாதித்து வந்தது. இதனால்தான் சந்திரிகா அம்மையார் இந்தியாவுக்குப் போய் பிரதமர் மன்மோகன் சிங்குடன் பேசினார். இதன்பின், சுனாமியால் பாதிக்கப்பட்ட சகல இன மக்களுக்கும் நிவாரண உதவிகளை வழங்குவதற்கு சுனாமிக்குப் பிந்திய முகாமைத்துவ நடவடிக்கைக் கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கு இந்தியா தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது என்று இலங்கை ஜனாதிபதியின் வருகையைத் தொடர்ந்து புதுடெல்கியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்று பரமசிவம் சொன்னார்.

சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்கான பொதுக்கட்டமைப்பில் இலங்கையின் அனைத்துத் தமிழ்க்கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்ற இந்தியாவின் நிலையை இலங்கை அதிபர் சந்திரிகா ஏற்றுக் கொண்டுள்ளார் என்றும் கூட்டறிக்கை தெரிவிக்கிறதாம் என்றேன்.

சந்திரிகா அம்மையாரைச் சந்தித்துப் பேசிய இந்திய அரசின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், பொதுக்கட்டமைப்பில் இலங்கையிலுள்ள அனைத்து தமிழ்க்கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும் என்பதே இந்தியாவின் நிலை என்று கூறியிருக்கிறார். சங்கரியாரும் மற்றும் இவர்கள் போன்றவர்களும் அடிக்கடி இந்தியாவுக்குப் போய் வந்ததும் இந்தியாவிலிருந்து வருபவர்களை இவர்கள் இங்கு சந்தித்துப் பேசியதற்கும் இந்தக் கூட்டறிக்கையில் பலன் தெரிகிறது என்றார் பரமசிவம்.

வகுப்பில் ஒரே பிள்ளை, அவன்தான் முதல்பிள்ளை என்றபடி சங்கரியாரும் தமது கட்சிக்கு கட்டமைப்பில் இடம் கேட்பார். இதேபோல் அமைச்சர் டக்ளசும் கேட்கலாம். இப்பொழுது பொதுக்கட்டமைப்பில் யார் யார் இடம்பெற வேண்டும் என்று சொல்லும் இந்தியா நாளை யார் யாருக்கு என்ன என்ன எவ்வளவு எப்படிக் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லலாம். இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடுகிறது என்று இனியாரும் குறைசொல்ல முடியாது. அதைத் தலையிடும்படி கேட்டதே இலங்கைதானே என்று இந்தியாவும் சொல்லக் கூடும் என்றேன்.

டி.எஸ்.சேனநாயக்கா - சந்திரிகாவின் தகப்பன் பண்டாரநாயக்கா டட்லி சேனநாயக்கா என்று இலங் கைத் தலைவர்கள் எல்லோரும் இந்தியத் தலைவர்கள் சொல்வது தான் சரியானவை என்று ஆமாம் சாமிகளாக இருந்தார்கள். இந்தியத் தலைவர்களையே வழிகாட்டிகளாகக் கருதிவந்தார்கள். சேர் ஜோன் கொத்தலாவல- பிரதமராக இருந்தபோது இந்தோனேஷியாவின் பாண்டுங் நகரில் கொழும்புத்திட்ட நாடுகளின் தலைவர்களின் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு பேசினார். சோஷலிஸக் கொள்கையைப் பற்றிப் பேசியதாக ஞாபகம். பின்னர் இலங்கைப் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல பேசினார். இவர் நேருவின் பேச்சுக்கு எதிர்மாறான கருத்தை, அமெரிக்காவுக்கு சாதகமாக எடுத்துப் பேசியதாக நினைவு. பேச்சுகள் முடிந்தபின் தலைவர்கள் கருத்துப் பரிமாறிக் கொண்டிருந்தசமயம், "சேர் ஜோன் நீங்கள் பேசியதற்கு முன் உங்கள் பேச்சின் பிரதியை எனக்கு ஒருதடவை காட்டியிருக்கலாமே!" என்று நேரு கேட்டாராம். இதற்கு, "ஏன், எதற்குக் காட்டவேண்டும்? நீங்கள் பேசுவதற்குமுன் உங்கள் பிரதியை எனக்குக் காட்டுகிறீர்களா?" என்று சேர் ஜோன் பட்டென்று கேட்டுவிட்டாராம். இதைச் சற்றும் எதிர்பாராத நேரு அசந்துவிட்டாராம். என்று பரமசிவம் சொன்னார். இந்த மாநாட்டிலிருந்து சேர் ஜோன் கொழும்பு திரும்பியபோது விமான நிலையத்தில் "பாண்டுங் வீரைய (வீரன்) வருக" என்ற கோஷம் வானைப்பிளக்க மக்கள் வரவேற்பளித்தார்கள். அன்றிலிருந்து சேர் ஜோனுக்கு பாண்டுங் வீரன் என்ற பட்டப்பெயர் நிலைத்தது என்றேன்.

இப்பொழுது நம்மட சங்கரிகள் காவடி எடுத்துக் கொடுக்க ஜே.வி.பியும், முடிவில் சந்திரிகா அம்மையாரும் இந்தியாவிடம் குடுமியைக் கொடுக்கிறார்கள். காலம் விரைவில் பதில் சொல்லும் என்று நகர்ந்தார் பரமசிவம்.

## வாசகர் நோக்கு...

# கைதடிப் பாலத்தின் அவலம் தீராதா?

கைதடிப் பாலத்தில் இரு முனைகளிலும் உள்ள வீதி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. சில மாதங்களுக்கு முன்னரே இந்தப் பாலம் திறக்கப்பட்டது. பாலம் இரும்பினால் பலமாக அமைக்கப்பட்டிருந்தாலும், இரு முனைகளிலும் உள்ள வீதி படுமோசமாகப் பழுதடைந்துள்ளது.

கற்கள் நிரப்பப்பட்ட பாதை என்பதால் கனரக வாகனப் போக்குவரத்துக் காரணமாக மேடும் பள்ளமுமாக இருபக்க வீதியும் காட்சியளிக்கிறது. வெயில் காலத்தில் புளுதி மயமாக காணப் படுகிறது. இந்தப் பாலம் கண்டி வீதியில் இருப்பதனால் தினமும் ஆயிரக்கணக்கான கனரக வாகனங்கள் போக்குவரத்துச் செய்கின்றன.

அதுமட்டுமன்றி தனியார் சிற்றூர்திகள், இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் தற்போது அதிகமாக சேவையில் ஈடுபடுவதால் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

இந்தப் பாலம் புனரமைக்கப்பட்டு இரு மாதங்கள் கடந்த நிலையிலும், இருபக்க வீதிகள் இன்னும் புனரமைப்பு செய்யப்படாத நிலையில் இருக்கிறது. இருபக்க வீதிகளும் புனரமைப்புச் செய்யப்படுமா?

தி.சாரங்கன், கல்வியங்காடு.

தெற்குத் திசையினிலே... கொழும்பிலிருந்து இந்திரஜித்...

# இனப்பிரச்சினைத் தீர்வா? கட்சி அரசியல் முனைப்பா?

நாட்டில் இன்று இறுக்கமான சூழ்நிலை ஒன்று உருவாகியுள்ளது. இந்தச் சூழ்நிலையானது அரசியல் என்ற விடயத்தில் மாத்திரமல்லாமல், பாதுகாப்பு உட்பட்ட பல விடயங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் ஆபத்தை கொண்டிருக்கிறது.

போர் நிறுத்த உடன்பாடு அமுலுக்கு வந்து மூன்றாண்டுகள் கடநத போதும், இப்போதே அதற்கு அச்சுறுத்தல் அதிகமாகியுள்ளதாகக் கருதப்படுகிறது.



சுனாமிக்குப் பின்னரான பொதுக் கட்டமைப்பு என்ற விடயம் சர்ச்சைக்குள்ளாகியுள்ள நிலையில் தென்னிலங்கையின் அரசியல் முறுகல் தேசிய ரீதியில் இருந்து இலங்கை இனப்பிரச்சினைக்குத் தர்வைக் காண்பதா? அல்லது கட்சி அடிப்படைக்கு முக்கியத்துவம் கொடுப்பதா? என்ற சிக்கலான நிலையை தோறறு வித்துள்ளது. குறிப்பாக ஜனாதிபதி இந்தப் பொதுக்கட்டமைப்பு ஏற் படுத்தப்படவேண்டும் என்பதில் முனைப்புடன் இருப்பதாகக் காட்டிக் கொள்வதால், அது அமைக்கப்படுமானால், அரசாங்கத்தில் இருந்து உடனடியாக விலக்கப்போவதாக ஜே.வி. பி. எச்சரித்துள்ளது.


இது முன்பு இருந்தே கூறப்பட்ட விடயம் என்ற போதும், தற்போதைய சூழ்நிலையில் ஜே.வி.பி தமது அரசியல் களத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்குத் தமது எதிர்ப்பை வெளிக்காட்டுவதில் தீவிரம் காட்டிவருகிறது. ஏற்கனவே அந்தக்கட்சி பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால், தாம் அரசாங்கத்தில் இருந்து விலகப்போவதாக எச்சரித்தபோது, அதனை ஜனாதிபதி ஒரு பொருட்டாக ஏற்றுக் கொண்டார். இந்த நிலையில் அவர் ஜே.வி.பியை சமாளிப்பதற்காகப் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் காலதாமதம் செய்து வந்தார். எனினும் கண்டியில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதிக்கு அவ்வாறான நழுவல் 'போக்'கை கடைப்பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சர்வ தேசத்தின் மத்தியில் அவர் வழங்கிய உறுதி மொழியை அடுத்தே, சர்வதேசம் இலங்கைக்கு மூவாயிரம் கோடி ரூபாவைத் தருவதாக உத்தரவாதம் அளித்தது. அதுவும், தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட்டால் மாத்திரமே அது சாத்தியமாகும் என்றும் சர்வதேசம் கூறிவிட்டது.

இந்த நிலையில் ஜனாதிபதி ஜே.வி.பியை பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு வழங்கும் வகையிலான பாதையில் கொண்டு வரும் முயற்சியை கைவிட்டுள்ளார். தமது ஜனாதிபதி பதவிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த நேரம் வந்துவிட்டதாக அவர் உணர்ந்து விட்டார். எனவேதான், கடைசியாக ஜே.வி.பியுடனான சந்திப்பின் போது பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தாருங்கள் என்ற கோரிக்கையையே அவர் விடுக்கவில்லை. இது ஜே.வி.பியை மிகவும் பாதித்து விட்டது என்றே கூறவேண்டும்.

ஜப்பானிய அரசாங்கத்திடம் பொதுக்கட்டமைப்புக்கு தாம் எதிர்ப்பு என்று உரத்த குரலில் தெரிவித்த ஜே.வி.பி - ஜனாதிபதியுடனான சந்திப்பின்போதும் அதே எதிர்ப்பைக் காட்டலாம் என்ற நினைப்பிலேயே சந்திப்புக்குச் சென்றது. ஆனால், அங்கு ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பு விடயம் தொடர்பாக எதுவுமே ஜே.வி.பியுடன் பேசவில்லை. இது அந்தக் கட்சியினரை மிகவும் பாதித்துவிட்டது எனக் கருத இடமுண்டு.







இதனையடுத்தே ஜே.வி.பி அரசாங்கத்தில் இருந்து விலகும் அறிவிப்பை உரத்தகுரலில் விடுத்துள்ளது.

முன்னர் அரசாங்கத்தின் அமைச்சரவையில் இருந்து விலகுவோம். ஆயினும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைக் காப்பாற்ற வேண்டியது தமது கடமை என ஜே.வி. பியின் கடமை என, ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்து வந்தமை இந்த இடத்தில் நினைவுபடுத்த வேண்டிய விடயமாக உள்ளது.

(ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைக் காப்பாற்ற வேண்டியது என அவர் கூறியது அரசாங்கம் என்ற பொருளையும் தருகிறது.)

## ஜனாதிபதியின் பொதுக்கட்டமைப்பு தொடர்பான இறுதி முயற்சி

ஜனாதிபதி தனது இந்திய விஜயத்தின்போது பொதுக் கட்டமைப்புக்கு இந்திய ஆதரவைப் பெற்றுக்கொண்டுள்ள இதேவேளை - ஜே.வி.பியை இந்திய வலியுறுத்தலின் மூலம் வழிக்குக் கொண்டு வர லாமா? என்றும் ஆராயந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஜே.வி.பி தமது நிலைபபாட்டில் இருந்து விலகுமானால், அதற்கு அடுத்து வரும் தேர்தல் ஒன்றில் தமது வாக்காளர்களின் நம்பிக்கையை இழக்க வேண்டியிருக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, ஜே.வி.பி இல்லாமலேயே பொதுக்கட்டமைப்பை அமைக்கவேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது. அதற்காக அவர் ஐக்கிய தேசியக் கட்சியினதும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பினதும் ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டுள்ளது. எனவே ஜனாதிபதி, கட்சி அரசியலுக்கு அப்பால் இருந்துகொண்டு, இந்த இரண்டு தரப்புகளினதும் ஆதரவுடன் பொதுக்கட்டமைப்பு அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளுடனான இணைந்த திட்டம் ஒன்றை முன்னெடுப்பதே அவரின் நிறைவேற்று அதிகாரத்துக்கு உரமூட்டும் செயலாக அமையும். அல்லது அவரின் கடந்த 10 வருடகால ஜனாதிபதி பதவியின் பிரதிபலன் பூஜ்ஜியமாக வரலாற்றில் எழுதப்பட்டுவிடும்.

## முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியா அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதியா?



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த போது, தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் ரெஜியைச் சந்தித்தமை தற்போது புதிய புயல் ஒன்றைத் தோற்றுவித்துள்ளதைத் தென்னிலங்கை அரசியலில் உணரக்கூடியதாகவுள்ளது. இதனையடுத்து அமெரிக்க தூதரகமும் இதற்கான விளக்கத்தை அளித்திருந்தது.

முன்னாள் ஜனாதிபதியாக இருந்தாலும், கிளின்டன் தற்சமயம் ஐக்கிய நாடுகள் சபையின் செயலரது சுனாமி நிவாரணம் தொடர்பான விசேட பிரதிநிதியாகும். எனவே, ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் ஏற்கனவே ரெஜியை சந்தித்திருந்தார். அதன் பின்னர் அவருடைய பிரதிநிதியான கிளின்டன் - தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதியைச் சந்தித்துள்ளார்.

எனவே இது தென்னிலங்கை அரசியலில் புயலை ஏற்படுத்தும் அளவுக்குப் பாரிய பிரச்சினையாக இருக்கப்போவதில்லை. ☆☆☆

---

யாழ். நூலக எரிப்பு நாள் நினைவாக... பகுதி - 05 - சந்துரு -

# ஜூன் - 01 பண்பாட்டுப் படுகொலையின் நினைவுநாள்

ரூபாவதி நடராஜா
முன்னைநாள் பிரதம நூலகர்.
யாழ்.பொதுசன நூலகம்.
(கொழும்பு)



தமிழர்களது தாயகமாம் யாழ்ப்பாணத்தில் வான்நோக்கித் தலை நிமிர்ந்து நின்ற அறிவுக் களஞ்சியமான யாழ்.நூல் நிலையம் அறிவற்ற பாதகர்களால் எரித்து அழிக்கப்பட்ட காட்சியை மீண்டும் ஒருமுறை எண்ணிப் பார்க்கவே மனம் வெந்து போகிறது.

யாழ்ப்பாண மக்களுக்கு 1981 ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதிய விடியல் அவல மாகவே விடிந்தது. யாழ்ப்பாண மக்கள் தமது நாளாந்தக் கடமைகளுக்குச் செல்லுமுன்பாகவே பொதுநூல் நிலையத்துக்கு நேரிட்ட துர்ப்பாக்கிய நிலையைக் காணநேர்ந்தது. உண்மையாக யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமல்ல, உலகமெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கு ஜூன் முதலாம் திகதி ஒரு இருண்ட நாளாகவே விடிந்தது என்றே கூறவேண்டும். அன்று முழு யாழ்.நகரமே சோபையிழந்து சோகமயமாகக் காணப்பட்டது என்றே கூற வேண்டும்.


எனக்கு நூலகத்தின் இரவல் வழங்கும் பகுதியும், உடனுதவும் பகுதியும் எரிகிறது என - ஜூன் மாதம் 01 ஆம் திகதி இரவு 10 மணியளவில் தகவல் கிடைத்தது. அப்போதைய யாழ். மாநகரசபை ஆணையாளர் இந் தத் தகவலைத் தெரியத் தந்தார். ஏன்? எப்படி? எதற்காக? என்ற பல கேள்விகளின் மத்தியில் இரவை ஒருவாறு கழித்துவிட்டு, மறுநாள் காலை விடிந்ததும் ஓடோடி நூலகத்துக்குச் சென்றபோது நூல் நிலைய வீதியிலும், நூலகத்தைச் சூழவும் பொது மக்கள் கூடிநின்று, நூலகம் எரிந்து சாம்பலாகிக் கிடப்பதை சோகம் நிறைந்த முகங்களோடு பார்த்தபடி நின்றனர்.

இவர் களைக் கடந்து நான் நூலகத்துக்குள் செல்லமுயன்றபோது, நூலகப் பணியாளர்கள் என்னை உட்செல்லவேண்டாம் எனவும், கட்டட எரிவுகளுக்குள் இப்பொழுது செல்வது ஆபத்தானது எனவும் கூறித் தடுத்தனர். ஆனால் என் னால் வெறுமனே நின்று வேடிக்கை பார்க்க முடியவில்லை. உடலெங்கும் ஒருவித பதற்றம், பரபரப்பு.

நடப்பது நடக் கட்டும் என்ற எண்ணத்துடன் நூலகத்தினுள் நுழைகிறேன். ஒருசில நூல்களாவது எரியாது தப்பியிருக்காதா? ஒருசில கோவை களையாவது காப்பாற்ற முடியுமா? என்ற நப்பாசை. இரவல் வழங்கும் பகுதிக்குள் சக ஊழியர்களுடன் செல்கிறேன். அங்கு எதுவுமே மிஞ்சியிருக்கவில்லை. கருகிக் கிடக்கும் சாம்பல் குவியல்களில் இருந்து புகை வெளி வந்துகொண்டிருந்தது.

எந்தப் பக்கம் பார்த்தாலும் தீச்சுவாடைகள். காற்றின் அசைவுகளுக்கு ஏற்ப எழுவதும், கலைவதுமாகக் காணப்பட்டன. ஏன் இந்தக் கொடிய தண்டனை எமக்கு? நாம் என்ன பாவம் செய்தோம்? இந்தக் கேள்விகள் மனதில் எழ, சுடுகாட்டுக்கு மத்தியில் நிற்பதுபோன்ற உணர்வே மேலோங்கிக் கிடக்கிறது.

இரவல் வழங்கும் பகுதியை விட, உடனுதவும் பகுதியில் கிடைத்தற்கரிய அரிய புத்தகங்களும், விலைமதிப்பற்ற ஏட்டுச் சுவடிகளும், ஏடுகளும் காணப் பட்டனவே. அவை தன்னும் எஞ்சியிருக்குமா என்ற பதற்றத்தோடு, அந்தப் பகுதிக்குச் செல்றேன். அவையும் சாம்பல் குவியல் குவியல் களாக... ஓ... 97 ஆயிரத்துக்கும் அதிகமான நூல்கள் ஒரு சிறு பொழுதில் கருகிச் சாம்பலா கிவிட்டதே.



இது தமிழ் மக்களது அறிவைச் சூறையாடுவதற்காக விஷமிகளால் விளைவிக் கப்பட்ட அனர்த்தமா? எப்படி எம் மக்களின் அறிவைச் சூறை யாட முடியும்? நூல்களையும், வரலாற்றுச்சுவடிகளையும் எரிப்பதன் மூலம் எமது மக்களது அறிவை மழுங்கடிக்க முடியுமென்று பொய்யர்கள் கண்ட கனவல்லவா இது என, என்மனம் அரற்றியது. அன்று மட்டு மல்ல, இன்றுவரை என் மனதை நெருடிக்கொண்டிருக்கும் விடயம் இது.

அன்று அந்த எரிந்துகிடந்த சாம்பல் மேட்டின் அருகில் இருந்து, அங்கிருந்த ஒவ்வொரு உள்ளங்களும் ஒரு உறுதியைத் தமக்குள் எடுத்துக்கொண்டன. இங்கே எரிந்து குவிந்து கிடக்கும் இதே சாம்பல் மேட்டிலிருந்தே உலகம் வியக்கும்படியான ஓர் அறிவுக் களஞ்சியத்தைக் கட்டியெழுப்புவோம் என்பதே அந்த உறுதியுரையாகும். அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாம் அனைவருமே ஒன்றுபட்டோம்.


சாம்பலில் இருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவைபோல புதுப்பொலிவுடன் நூல் நிலையம் மீண்டும் எழுந்து நிற்கிறது. மத்திய நூலகத்துடன் கிளை நூலகங்களும் தொடங்கப்பட்டு, வாசகர்கள் தத்தமது வசதிக்கு ஏற்ப, தமது பிரதேசங்களில் இருந்தே கல்வி அறிவை மேம்படுத்துவதற்கான வசதிகள் பலவும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அன்று உடைந்துபோன இதயத்துக்கு இது ஒத்தடம் தருவதுபோல அமைந்திருக்கிறது.

இவ்வாறாக அன்றைய நூலகர் ரூபர்வதி நடராஜா - தனது நினைவுகளைப் பகிர்ந்துகொண்டபோது, எனக்கு வலிகாமம் வடக்கு மக்களது இடப்பெயர்வுக் காலகட்டத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த கலைஞர்கள் அரங்கேற்றிய நாடகம் ஒன்றில் பயன்படுத்தப்பட்டதாக நான் அறிந்து கொண்ட கவிவரிகள் நினைவுக்கு வருகின்றன.

(உரியவர்களது பெயர்களைக் குறிப்பிட முடியாமைக்கு மன்னிக்கவும்) "....... கிள்ளக் கிள்ள வெற்றிலையும் தளிர்ப்பதைப் பாரு. நீயும் மெல்ல மெல்ல துன்பத்தினால் உயர்வதைப் பாரு...." எனத் தொடர்கிறது அந்தக் கவிவரிகள். இதனையே செகப்பிரியர் இப்படிக் கூறுகின்றார். "துன்பங்களும் துயரங்களும் தான் அற்புதங்களை நிகழ்த்துகின்றன." ஆம் நாங்கள் அறிவைத் தேடும் மனிதர்கள் அறிவுடைமனிதர்கள்.

ஆக்கிரமிப்புக்களையும், அநீதிகளையும் எதிர் கொண்டும் எழுந்து நிற்போம் என்பதைத் தீமூட்டிப் பழக்கப்பட்ட தீயோருக்குக் கூறி நிற்போம். ☆☆☆

# நந்தி என்ற நல்ல மனிதர்



நேற்று சனிக்கிழமை மாலை ஒரு இலக்கிய நண்பர் வந்து "நந்தி போய் விட்டார்" என்றார். ஓரளவுக்கு எதிர் பார்த்திருந்த செய்தியானாலும் நெஞ்சிலே யாரோ ஓங்கிக்குத்தியது போலிருந்தது.

நாலைந்து நாட்களாக அவரைப் போய்ப்பார்க்கவேண்டுமெனச் சொல்லிக்கொண்டிருந்தேன். என்னுடைய இயலாமை – அவ்வளவு சீக்கிரமாகப் போய்விடமாட்டார் என்ற நம்பிக்கை. இவை என்னுடைய விருப்பத்தை நிறைவேறவிடாமல் செய்துவிட்டன.

"நந்தி" என்ற மருத்துவப் பேராசிரியர் சிவஞானசுந்தரம் அவர்கள் இனி எம்முடன் இல்லை என்று நினைப்பதே கஷ்டமாக இருக்கிறது. ஒரு சிறந்த அறிவு பூர்வமான எழுத்தாளர் என்பதை விடவும், மிக மதிப்புமிக்க ஒரு மருத்துவத்துறை பேராசிரியர் என்பதைவிடவும், எளிமையும், நேர்மையும் மிக்க ஒரு நல்ல மனிதரை – நம்பிக்கைக்குரிய ஒரு கண்ணியமான மனிதரை – உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத உயர்ந்த – நல்ல மனிதரை இழந்துவிட்டோம் என்பதுதான் எனக்குப் பெரிதாகப் படுகிறது.

அவரைப் போன்ற ஒரு நல்ல இலக்கிய நண்பரை இனி எங்கே காணப்போகிறோம்?

– வரதர்

# கூட்டுறவு காப்புறுதிக் கம்பனி நேற்று யாழ்ப்பாணத்தில் திறப்பு

யாழ்ப்பாணம் —

கூட்டுறவு காப்புறுதிக் கம்பனியின் கிளை அலுவலகம் நேற்றுக் காலை 11.00 மணியளவில் கஸ்தூரியார் வீதியில் தனியார் கட்டடம் ஒன்றில் காப்புறுதிக் கம்பனியின் தலைவர் லயன் சமரசிங்கவால் திறந்து வைக்கப் பட்டது.

கூட்டுறவுக் காப்புறுதி தலைமை நிறைவேற்று உத்தியோகத்தர் ஜனா முகைதின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதமவிருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ், காப்புறுதிக் கம்பனியின் தலைவர் லயன் சமரசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்விற்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் கனகசபாபதி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சிவலிங்கம், மக்கள் வங்கி பிராந்திய உதவி முகாமையாளர் குகதாசன், கடற்றொழில் உதவி இயக்குநர் சண்முகலிங்கம், வடமாகாண கடற்தொழில் கூட்டுறவு சமாசத் தலைவர் தவரட்ணம், யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி தலைவர் கனகலிங்கம் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் —

அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சினால் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மூலவள உதவியாளர், ஆராய்ச்சி உதவியாளர், கணக்கு உதவியாளர், வழக்குநர் உதவியாளர், தகவல் தொழில்நுட்ப உதவியாளர், தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உதவியாளர், பலன் விளைவு அபிவிருத்தி உதவியாளர், அபிவிருத்தி உதவியாளர் (கருத்திட்டம்), அபிவிருத்தி உதவியாளர் (ஆவணப்படுத்தல்), போன்ற பதவிகளுக்கே அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம்பெற்ற பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னதாக செயலாளர், அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, இல.310, காலிவீதி, கொழும்பு – 03 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இது தொடர்பான மேலதிக விபரங்களை நமது ஈழநாடு அலுவலகத்தில் பார்வையிடலாம்.

## பாராட்டு விழா

வடமராட்சி —

வடமராட்சி கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி யாழ்.கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினத்தின் சேவை நலனைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும், வடமராட்சி கல்வி வலயத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜாவை வரவேற்கும் நிகழ்வும் இன்று காலை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மண்டபத்தில் நலன்புரிச் சங்கத் தலைவர் கே.செபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (13)

## நேர்முகப் பரீட்சைக்கு தோற்றாதவர்களுக்கு

யாழ்ப்பாணம் —

கடந்த மாதம் யாழ்.செயலகத்தில் காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் உதவியாளர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் எதிர்வரும் 07 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ். செயலகத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

முன்னர் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குக் கலந்து கொள்ளத் தவறிய அனைத்து விண்ணப்பதாரிகளையும் இதில் கலந்துகொள்ளுமாறு யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார்.

## உலக சுற்றாடல் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் —

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு அரியாலை அபிவிருத்திச் சங்கம் நடத்தும் உலக சுற்றாடல் தின நிகழ்வுகள் – இன்று பிற்பகல் 4 மணிக்கு அரியாலை விவசாய சம்மேளன அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் எஸ்.ரி பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ்ப்பாணத்திற்கான உதவிப் பணிப்பாளர் விஜிதா சத்தியகுமார் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

## விண்ணப்ப திகதி நீடிப்பு

சைவ பரிபாலனசபை வருடந்தோறும் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தும் சைவநெறித் தேர்வுக்கான விண்ணப்ப திகதியை இம்மாதம் வரை நீடித்துள்ளதாக தேர்வுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்களை இம்மாதம் 15ஆம் திகதி வரை அனுப்பிவைக்க முடியும்எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# லெவன் ஸ்ரார் கழகம் நடத்தும் கிரிக்கெட் இறுதி ஆட்டம்!

யாழ்ப்பாணம் —

ஆனைக்கோட்டை லெவன் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வை.அர்ஜன் ஞாபகார்த்தமாகவும், கழகத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்ட நிகழ்வு இன்று மாலை 2 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் திருமணமானவர்கள் அணிக்கும் திருமணமாகாதவர்கள் அணிக்குமிடையிலான காட்சியாட்டம் இடம்பெறவுள்ளது. இதன் பின்னர் மூன்றாமிடத்திற்காக நடைபெறும் ஆட்டத்தில் கொக்குவில் மேற்கு பிடாரி அம்பாள் அணியை எதிர்த்து சுதுமலை அம்பாள் அணி மோதவுள்ளது.

தொடர்ந்து முதலாமிடத்திற்கான ஆட்டத்தில் லெவன் ஸ்ரார் அணியை எதிர்த்து அரியாலை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பி.மாதுளன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.


இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

Muthayamal Educational Institutions

RASIPURAM - 637408, NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது ANNA (Engineering) University - PERIYA UNIVERSITY ஆகியவற்றின் பட்டதாரி (Degree Courses) நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் A/L சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலாண்டுகள் | உட்பிரவேச தகைமைகள் |
| --- | --- | --- |
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Information Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| | | |
| B.Sc. Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths, Chemistry, Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S | 3 Years | Pass in All Subjects in any Discipline |

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் Kaveri Polytechnical College இல் சேர்ந்து 3 வருட Diplomaவைப் பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் Engineer ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் Pending Results முறையில் ஜூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியைத் தொடங்க வாய்ப்பு

Call : 0777 767818 / 011-4512591 for prospectus and application forms

SCHOLARS INFORMATION CENTER

2nd floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06. e.mail : peter@scholars-info.com





நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

# விலக்குப்பிடித்த மாமனாரை வெட்டிக்கொன்ற மருமகன்

## நேற்றிரவு வரணியில் சம்பவம்

மீசாலை

தென்மராட்சி - வரணி நாவற்காடு பகுதியில் நேற்றிரவு மகளுக்கும் மருமகனுக்கும் இடையில் நடந்த பிணக்கைத் தீர்க்க முயன்ற மாமனார் மருமகனால் வெட்டிக்கொல்லப்பட்டார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்றிரவு 9 மணியளவில் மகளுக்கும் மருமகனுக்கும் ஏற்பட்ட பிணக்கைத் தீர்க்க முயன்ற மாமனாரையும், மைத்துனியையும் மருமகன் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தினார். உடனடியாக இவர்கள் இருவரையும் சாவகச்சேரி வைத்திய சாலைக்கு கொண்டுசென்றபோது - மாமனாரான கந்தர் நீலயினர் (வயது-54) வழியிலேயே உயிரிழந்தார்.

படுகாயமடைந்த மைத்துனியான சுதாஜனா (வயது-25) சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

உயிரிழந்தவரின் சடலமும் யாழ்.போதனாவைத்தியசாலையில் பிரேதபரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (25)

# மன்னம்பிட்டியில் இளைஞர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி!

பொலநறுவை

பொலனறுவ மாவட்டத்திலுள்ள மன்னம்பிட்டியில் தமிழ் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஆஸ்பத்திரி வீதி மன்னம்பிட்டியைச் சேர்ந்த சிவசாமி சிவகுமார்(வயது27) என்ற இளைஞரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ஒன்றில் பணிபுரியும் இவர் வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது மாரியம்மன் கோவிலடிச்சந்தியில் இனந்தெரியாத நபர்களால் ரி56 ரகத் துப்பாக்கியினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்த இவர் பின்னர் அதிலிருந்து விலகியவரென்றும் கூறப்படுகிறது.

இது தொடர்பாகபொலனறுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விரக்தியின்...

விலகி ஏதாவது சிக்கல்நிலை தோன்றுமாக இருந்தால், ஜனாதிபதியும் குற்ற நிலைக்கு ஆளாவார்.

இந்த நேரம் - ஜனாதிபதிக்கு எதிராகச் செயற்பட என்னால் இயலாது. எனினும் எந்தவேளையிலும் ஜனாதிபதிக்கு எதிராக நான் செயற்படமாட்டேன்.

இந்த நிலையில் எனக்குள்ள ஒரே மாற்றுவழி நாட்டை விட்டு வெளியேறுவதுதான். இந்த முடிவை நான் ஏற்கனவே எடுத்துவிட்டேன் எனவும் தெரிவித்துள்ளார். (தே)

## ஆளும் கூட்டணி...

ஆளுமை மிக்கவர்களை உருவாக்க ஜே.வி.பி. நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. கடந்த ஓராண்டில் ஆளும் கூட்டணி அரசானது அரச நிறுவனங் களையோ இயற்கை வளங்களையோ விற்கவில்லை. 42 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நிரந்தர வேலைவாய்ப்பை கொடுத்துள்ளது என்றார்.

## வடக்கு- கிழக்கை...

பிப்பார். நாடாளுமன்ற செயலரிடம் சமர்ப்பிக்கப்படும் இந்த தனிப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டம், முதலாவது வாசிப்பின் பின், தேவைக்கேற்ப உயர்நீதிமன்றத்துக்கும் பின்னர் இது தொடர்பான அமைச்சுக்கும் சமர்ப்பிக்கப்படும்.

இரண்டாவது தடவை வாசிப்பு முடிவடைந்ததும், நாடாளுமன்ற நிலையியற் செயற்பாட்டுச்சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டு, விவாதத்திற்காக மீண்டும் நாடாளுமன்றில் முன்வைக்கப்படும் என அவர் தெரிவித்தார். (தே)

## இலங்கைக்கு...

வேளை விடுதலைப் புலிகளுக்கும் - அரசுக்கும் மீண்டும் மோதல் ஏற்படுமானால், எந்தவிதமான ஒரு இராணுவ உதவியை இந்தியா செய்தாலும் அது ஈழத்தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு செய்கின்ற இராணுவத் தாக்குதலுக்கு உதவுவதாகவே அது போய் முடியும்.

இந்தியா எந்த விதத்திலும் இலங்கைக்கு இராணுவ உதவி செய்யக் கூடாது என்று நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

இலங்கையில் தமிழர்கள் விடுதலைப் புலிகள், இந்திய அரசோடு நல்லுறவைப் பேணுவதையே விரும்புகிறார்கள். எந்த விதத்திலும் இந்தியாவின் நலனுக்கெதிராக செயற்பட மாட்டார்கள் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

அனைத்தையும் பொறுமையாக கேட்டுக்கொண்ட பிரதமர் மன்மோகன்சிங் - இந்தியா இலங்கைக்கு இராணுவ உதவி செய்யாது, இராணுவ கூட்டு ஒப்பந்தத்தையும் செய்துகொள்ளாது என்று உறுதியளித்திருக்கிறார். அவர் பதிலளித்த விதத்தில் எனக்கு மனத்திருப்தியாக இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

## பொதுக்கட்டமைப்பு...

தால் ஜே.வி.பி பலவீனமடைந்துவிடும் எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், தற்போதைய நிலைமையில் ஜே.வி.பி அரசுக்கான ஆதரவைத் தொடருமாக இருந்தால் மக்கள் மத்தியில் கட்சிக்குள்ள நன்மதிப்பு மேலும் குறைவடையுமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர் .

ஆனால், அமைச்சுப் பதவிகளிலிருந்தும், பொறுப்புக்களிலிருந்தும் விலகி அரசாங்கத்தினுள்ளேயே பின்வரிசை உறுப்பினர்களாக அமர்ந்து கொள்ள வேண்டுமென மற்றொரு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கட்சியின் செல்வாக்கு கிராமமட்டத்தில் வீழ்ச்சி கண்டுள்ளதால் உடனடியாக தேர்தலுக்குச் செல்ல முடியாதெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்மர் பொதுக்கட்டமைப்பு உருவாக்கத்திற்கு ஆதரவு தெரிவிப்பதாக - அமைச்சர் டி.எம்.ஜயரத்ன அண்மையில் தெரிவித்த கருத்தும், ஜே.வி.பியின் உட்பூசலுக்குக் காரணமாக அமைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த உட்பூசலைப் பயன்படுத்தி ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள்வாங்குவதற்காக இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# கல்முனையில் புத்தர்சிலை இனந்தெரியாதோரால் அழிப்பு

கல்முனை

அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனையில் புத்தர்சிலை ஒன்று நேற்று அதிகாலை இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டது.

கல்முனை சிங்கள மகாவித்தியாலயத்தில் இருந்த ஒரு மீற்றர் உயரமான புத்தர்சிலையே சேதமாக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 2 மணிக்கும் 4 மணிக்கும் இடையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றிருப்பதாக கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்த அந்தப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதாக கல்முனை பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பி.செனிவிரட்ண தெரிவித்தார்.

கல்முனை நகரில் இருந்து 500 மீற்றர் தொலைவில் சிங்கள மகாவித்தியாலயம் அமைந்துள்ளது. இது 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

சேதமடைந்த புத்தர்சிலைக்குப் பதிலாக அம்பாறையிலிருந்து புதிய புத்தர்சிலை ஒன்று கொண்டுவந்து வைக்கப்பட்டுள்ளது.

## புரட்சிகள்...

திருந்தது.

அதற்கமைய கூடிய அரசியல் சபை - எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. சார்பாக தனியாக வேட்பாளரை நிறுத்துவதெனவும் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தனியாக ஜே.வி.பி. போட்டியிடுவதற்கான ஆலோசனையையும் வழங்கியுள்ளது.

இந்த ஆலோசனை மத்திய செயற்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்படும் எனத் தெரிவித்தார்.

எனவே நாளை முதல் 16 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலம் - இந்த நாட்டின் அரசியலில் அதிசயிக்கத்தக்க தீர்க்கமான அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடியதாக இருக்குமென அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (தே)

## உடுப்பிட்டியில்...

துறையைச் சேர்ந்த இராசதுரை தங்கராசா (வயது 60) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

குறித்த நபரும் சகோதரியும் நெல்லியடி சந்தைக்குச் சென்றுவிட்டு சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது உடுப்பிட்டி - மல்லன்தரை வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

தலையில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான இவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வல்வெட்டித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறைபொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (12-14)

## பேராசிரியர்...

அண்மைய சில நாட்களாக கடும் சுகவீனமுற்றிருந்த இவர் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே நேற்று காலமானார்.

ஈழத்தின் சிறுகதை இலக்கியத்திற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் பேராசிரியர் நந்தி குறிப்பிடத்தக்கவர். அத்துடன் சிறந்த நாவலாசிரியர், நாடகாசிரியர், அறிவியற் கலைக்கட்டுரை ஆசிரியர், திரைப்பட, நாடகநடிகர், கலை இலக்கிய சமய பண்பாட்டு பேச்சாளர் ஆவர்.

சுண்டுக்குளியில் பிறந்த இவர் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவரது இறுதிக் கிரியைகள் நளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூரிலுல்ல(முத்திரச் சந்திக்கு அருகாமையில்) அவரது இல்லத்தில் நடைபெறும்.

பபு ரெக்ஸ்
இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சுடிதார் துணிவகைகள், சுடிதார் வகைகள், கவுஸ்கோட் துணி வகைகள், லேடீஸ் கவுன், ரீ சேட், ஸ்கேட், பிளவுஸ், கிப்ட் வகைகள், ஒரிபிலேம் கிரீம் வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
பபு கொமினிகேசன்
(பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கு அருகில்)
இல: 30, வளாகவீதி,
திருநெல்வேலி.

# தமிழீழத் தேசியத் தலைவர் நோர்வே சென்று வந்தாராம்!

கொழும்பு

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் இரண்டு தடவைகள் நோர்வேக்குச் சென்று வந்துள்ளதாக ஆங்கில இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளிடம் உள்ள விமானங்கள் மூலம் அவர் மாலை தீவுக்குச் சென்று அங்கிருந்து விசேட விமானம் மூலம் நோர்வே மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளுக்குச் சென்று அதேவழியில் மீண்டும் வன்னி திரும்பியதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த இணையத்தளம் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சுனாமி அனர்த்தம் ஏற்படுவதற்கு இரு தினங்கள் முன்னதாக நோர்வே ஏற்பாட்டில் இந்தப் பயணத்தை மேற்கொண்டதாகவும் - நோர்வேயில் - ஒரு நாட்டின் தலைவருக்கு அளிக்கப்படும் மரியாதை தமிழீழத் தேசியத் தலைவருக்கு விமான நிலையத்தில் வழங்கப்பட்டதாகவும் நோர்வே பிரதமரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நோர்வே பிரதமரை தமிழீழத் தேசியத் தலைவர் சந்தித்துப் பேசியதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்கள்



### பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம் (நந்தி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாட் பேராசிரியர் செ.சிவஞான சுந்தரம் (நந்தி) அவர்கள் 04-06-2005 சனிக்கிழமை மதியம் காலமானார்.

இவர் சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும்,நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்டவர். சாந்தியின் கணவரும், வள்ளி, திருமதி தெய்வி தபோதரன், திருமதி ஜனனீ தேவானந்த், திருமதி லஷ்மி கமலரூபன் ஆகியோரின் தந்தையும், தபோதரன், தேவானந்த், கமலரூபன் ஆகியோரின் மாமனாரும், அபிராமியின் அன்புப் பேரனும், திருநாவுக்கரசு (கனடா), காலஞ்சென்ற சிவஞானமணி நித்தநாயகம் ஆகியோரின் சகோதரரும், நித்தநாயகம், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், Dr. ஞானலிங்கம் (இங்கிலாந்து), Dr. ஸ்ரீரங்கலிங்கம் (இங்கிலாந்து), திருமதி ஜானகி சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (06-06-2005) திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள், அன்பு மாணவர்கள் மற்றும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*681/2, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர் (முத்திரைச்சந்தி அருகாமை)*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
*மனைவி*

*(1187)*



### திருமதி தற்பரானந்தம் சரஸ்வதி (ஆச்சாரி ஆனந்தம்)

சந்திரபுரம், மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தற்பரானந்தம் சரஸ்வதி 04-06-2005 (சனிக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தற்பரானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், சந்திரவதனா, சக்திவேல் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர் இராமநாதன் (தெல்லிப்பளை) மற்றும் தர்மகுலசிங்கம், மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமியாரும், சுதாஜினி, கோகுலதாஸ், டினேஷன், ஜீவிதா ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05-06-2005 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சவுக்கடி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புதிய ஒழுங்கை,*
*சந்திரபுரம்,*
*மட்டுவில் வடக்கு,*
*சாவகச்சேரி.*

*தகவல்:*
*சந்திரவதனா (மகள்)*

*(C/4184)*

### நாகமணி பாலச்சந்திரன்

தாவடி தெற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நாகமணி பாலச்சந்திரன் நேற்று சனிக்கிழமை கால மனார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி - இராசம்மா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற வீரசிங்கம் - இரத்தினம் அவர்களின் அன்பு மருமகனும், சந்திரகுமாரியின் அன்புக் கணவரும், பிறேமா (கனடா), பிறேமலதா (கனடா), கௌரி, சுதாகரன் (கனடா), பிரியா ஆகியோரின் தகப்பனாரும், சர்வானந்தன் (கனடா), சந்தரசீலன் (கனடா), சுதாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சபிதன், பாமினி, ரஜிதகுமார்,மதுஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினம், நடராசா, குணசிங்கம், துரையப்பா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 05-06-2005 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகள் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*தாவடி தெற்கு,*
*கொக்குவில்*

*தகவல்:*
*நீ.சுதாகரன்*
*(மருமகன்)*

*(1188)*

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.06.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.